Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 16 (02.09.2004) வியாழக்கிழமை இதழ்:335

## ‘இலங்கையில் போர் மூளும் அபாயம்’

# தமிழக - கேரள கடற்பரப்பில் கடற்படை பாதுகாப்பு தீவிரம்!

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கையை அடுத்து நடவடிக்கை



(சென்னை)

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தேக்கநிலையை அடைந்துள்ள சூழலில் – மீண்டும் இலங்கையில் போர் மூளலாம் என்று இந்திய உளவுத்துறையினர் கொடுத்த இரகசிய எச்சரிக்கையை அடுத்து தமிழக – கேரள கடற்பகுதியில் இந்தியக் கடற்படை பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் எந்தவித முன்னேற்றமும் எட்டப்படாத சூழ்நிலையில் கருணா விவகாரத்தால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான முறுகல் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில்தான் புலிகளுக்கும் இலங்கை அரசபடையினருக்கும் இடையில் மீண்டும் சண்டை மூளலாம் என்று இந்திய உளவுத்துறை இந்திய அரசாங்கத்துக்கு இரகசியத் தகவலை வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூர் துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணிக்கு ஏறாவூர் சதாம் ஹுசேன் கிராமத்தில் நடை

## கிழக்கில் கொலைகள் தொடர்ந்தாலும்

# சமாதானம் மீதான நம்பிக்கை வலுவானதாகவே இருக்கிறது!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

## திருமலை இராணுவ தளபதியை எழிலன் நேற்று சந்தித்து பேச்சு!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் திருகோணமலை மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணிக்கு ஏறாவூர் சதாம் ஹுசேன் கிராமத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இஸ்மயில் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார்.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானவர் தனது வீட்டில் தங்கியிருந்தவேளை வீட்டில் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கிழக்கில் இடம்பெறும் கொலைகள் போர் நிறுத்தத்துக்கு பாதகமானதாக இருந்த போதிலும், சமாதானத்தின் மீதான நம்பிக்கை வலுவாகவுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பியுள்ளமையானது மறுபடியும் போர் மூளாது என்ற நிலைமையை உணர்த்தி நிற்கிறது.

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் இடைநிறுத்தப்பட்ட மாதாந்த சந்திப்புக்களை ஆரம்பிக்கவிருப்பதானது அங்கு சுமுகநிலையை உருவாக்கியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர்ஜெனரல் ட்ரொன்ட் புறூவ்ஹொவ்டே இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்த இருக்கிறார்.

போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களைத் தடுப்பது குறித்து விடுதலைப் புலிகளுடன் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும், இந்தப் பேச்சுக்களின் போது எட்டப்பட்ட தீர்மானங்கள் குறித்தும் புறூவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளில் இந்தியாவின் தலையீட்டைக் கோருகிறது ஐ.தே.க.!

## இதற்காகவே மிலிந்த புதுடெல்கி பயணம்!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா உதவவேண்டும் என்று வலியுறுத்தவே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட புதுடெல்கிக்கு சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

மிலிந்த மொறகொட இந்திய அரசின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து தற்போது இலங்கையின் எழுந்துள்ள அரசியல் குழப்ப நிலையில் இந்தியா நேரடியாகத் தலையிட்டு இணக்கப்பாட்டைக் காண முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட மிலிந்த மொறகொட - இது ஒரு முதற்கட்டப் பேச்சுவார்த்தை முயற்சி மட்டுமே என்றும் முக்கிய பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறும் எனத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனரல் குலதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று மாலை 3.00 மணிக்கு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் இரு மணிநேரம் நீடித்தது.

கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை தலைவர் டக்பின்தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்!

### ஐரோப்பிய யூனியன் கூறுகிறது

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டிற்கமைய கண்காணித்துவரும் இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளை ஐரோப்பிய யூனியன் உன்னிப்பாக அவதானிப்பதாக ஐரோப்பிய யூனியனின் இலங்கைக்கான உதவிப் பிரதிநிதி வாட்டர் வில்டன் தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள போர் நிறுத்தத்தை கண்காணிக்கும் ஸ்கண்டிநேவிய குழுவின் நடவடிக்கைகளையும் இலங்கை சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் நடவடிக்கைகளையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# நியமனம் பெற்ற பட்டதாரிகள் விபரம்...

## வேலணை

எ.ஆனந்தவிஜி, எம்.வனஜா, வி.விஜயநேசன், எஸ்.சிவேந்திரன், எஸ்.கிருபாணந்தி, ஆர்.தவமோகன், ரி.சிறிசெல்வம், எஸ்.சிவேந்திரன், வி.திரிலோகசுந்தரி, வி.கணேசகுமார், ஆர்.விஜயலஷ்மி, எஸ்.ஆதிரமணன், ஆர்.ரமணன், ஆர்.தேவகலா, எஸ்.சிவகாந்தி, எஸ்.மதனகௌரி, என்.தயாளினி, ரி.யோகேஸ்வரி, ஏ.அங்கயற்கண்ணி, எஸ்.தர்சினி, வை.அனிருத்தனன், எஸ்.நிரஞ்சினி, எஸ்.உமையாள், வி.முரளிதாஸ், பி.சசிகலா, எம்.ரூபகௌரி,

## யாழ்ப்பாணம்

எஸ்.ஆர்.மேரிறொசாந்தி, ஜி.டி.மரியதாஸன், சி.ஜே.ஆர்.மரியநாயகம், வை.கேதீஸ்வரி, எவ்.மேரிலக்ஷனா, வி.சண்முகரட்ணம், வி.ஜுலியல், ஜி.நாகேஸ்வரன், எம்.பத்மராஜ், வி.சுபாசினி, எஸ்.சிறிசிவசக்தி, ஏ.வசந்தகுமாரி, டி.சுதாஜினி, ஏ.ஜெனிபேட், ஜெ.நித்தியானந்தா, எஸ்.சபாபதி, ஜே.எவ்மோசஸ், ஜே.ஜேடியோனி, ஜே.ஜஸ்ரின், பி.பத்மகுமார், கே.பிரபா, சி.சத்தியவாணி, ஜி.ஆனந்தரூபி, ரி.வினோதன், எவ்.றெஜிஸ்நியூட்டன், வி.நிக்லோஸ், ஜோன் கியூபேட், பி.றொபினா றெனோலா, எஸ்.துஷ்யந்தி, டி.டி.ஸ்ரெமின் அஜீவனி, பி.வில்லியம் அலெக்ஸ், எஸ்.சுபாஜினி, என்.கவிதா, பி.பஞ்சலிங்கம், ரி.சுதர்மினி, ஆர்.ஞானவதி, கே.சித்ரூபினி, எம்.பேனாட் ரமேஷ், கே.கயானந்தினி, கே.ஞானாம்பிகா, எஸ்.மீனாம்பிகை, வி.அமில்ரன், எல்.விஜயதிலக், ஜி.கிருஷ்ணமலர், ஏ.ஜி.சசிகுமார், கே.ஏ.தேவபாலன், ரி.எம்.வசந்தநாயகம், ஏ.அன்ரெனிற்றா, எல்.பிறேமநாத், ஆர்.ரமணகிருஷ்ணா, ஜே.ஜெயந்தன், ஜே.நித்தியானந்தன், எஸ்.அனிற் கலிஸ்ரஸ், எஸ்.றொமேஷ், எ.ஜேசுதாசன், எஸ்.கிருபாகரன், சி.ஏ.அரவிந்தன், ஏ.பாலேந்திரா, வி.யுதாசதீஸ்குமார், சி.கியு.சிவநாதன், பி.காண்டீபன், ஜி.பிரேமலதா, எஸ்.வினோபாகரன், ஏ.அன்ரன் பவுல், யு.நவரட்ணம், எஸ்.தீபன் திலீசன், எல்.சுகந்தன், இ.ஜெ.ஜெஸ்லி, எஸ்.சோபிதா, ரி.கஸ்தூரி, ரி.கோகுலன், எஸ்.ஜெயந்த ஜெயசிறி, கே.ராஜரட்ணம், எல்.ஜெயமங்கள ஜெயராட், ஜே.அருளானந்தம், எஸ்.ராஜசெல்வி, ஆர்.திரிலியாத் பெலிஷியா, இ.ஆர்.சாந்தகுமார், பி.மதன், பி.விஜிதா, ரி.சிவதர்சினி, கே.இ.ஜெனிற்றா, ஏ.அலையரசி, ஜி.அமலராணி, ஜே.ஏ.எம்.சுபோதினி, ஜி.கொலிஸ்ரினா, ஏ.எவ்.ரட்ணகுமார், எம்.சுரேந்தினி, ஏ.ஜெ.அலெக்ஸ்சாண்டர், என்.பிரபாகரன், எஸ்.பிறிஜெற்றநிலா, எம்.சிபில்லா ரோஸ், எம்.எஸ்.சிவரூபி, ஆர்.ராஜ்குமார், ஆர்.பேனிற்றா, ஜே.அமொறின், என்.ஷகீலா, ஆர்.பத்மபிரியா, எம்.அலெஸ்ரின், ஜி.சர்மிலா, ஏ.என்.அனுகீதா, எம்.துஷ்யந்தி, கே.பிறிம்ரோஸ், ஜே.ஜரின் சுபத்திரா, ஏ.வை.பெனிற்றா, எஸ்.மேரி இமாகுலதா, கே.சதீஸ்வரன், ஆர்.ஜெயராம், ஏ.ஜே.எம்.அமலினி, ஏ.வாசுகி, எம்.பிரசாந்தன், எஸ்.ஜீவசீலன், கே.பிரதீபன், ரி.கோபிநாத், ஆர்.சிவ ரஞ்சினி, ஜே.விக்கினேஸ், இ.அரனோல்ட், இ.நளாஜினி, எம்.மதுமதி, எஸ்.டென்னி யசோதரன், ஏ.டெனிஸ் ராஜகுமார், பி.கம்ஸத் வாணி, ஏ.டிரோஜினி பரீனா, ஜி.குணாஜினி, எஸ்.கேசவன், பி.சசிகலா, ரி.கவிதா, என்.சங்கீதா, எஸ்.ஆர்.மோகனதாஸ், எம்.பிரியசாந்தி, வண.ஆர்.ஏ.மலர்விழி, எஸ்.சாந்தலிங்கம், ஜி.டினேஸ் பிரியரங்கன், ஆர்.நிசாந்தினி, எஸ்.தயாபரி, பி.கல்கி, சி.சிந்தியா, ஏ.மரியசீலி, ரி.அபராஜிதா, ரி.அரவிந்தன், ஜே.நிரஞ்சன், எம்.மனோகரன், ரி.சதீசன், ஜே.சி.சகீலாசிறிசாந்தி, ரி.தவப்பிரியா, இ.சாந்தினி, எம்.மோகனலஷ்மி, ஆர்.ஆர்.மருசெல்லின், எஸ்.சிவசிறி, எஸ்.பி.நிலேஸ், எஸ்.எல்.பொன்ராணி, ஜே.கரோலின், எஸ்.சுதர்சன், ஜே.விக்கினராஜன், எஸ்.ஸ்ரீபன், ஆர்.உதயனன், எஸ்.ஜெனரட்ணம், ஆர்.ஜேசுதா,

## நல்லூர்

பி.அனுசா, கே.கேதீஸ்வரி, ரி.விசாகன், எஸ்.வைதேகி, என்.சியாமினா, எஸ்.சிவனேசன், எஸ்.சத்திநந்தன், கே.சதீஸ்குமார், ஆர்.கலாவதி, ஆர்.புஸ்பமாலா, ரி.தயாளினி, எஸ்.சுகந்தினி, ஆர்.ரஜிதா, ரி.எஸ்.அகிலன், பி.காண்டிதன், எஸ்.கரிதாஸ், ரி.கவிதா, எல்.சசிரேகா, ஜே.சுபாசினி, கே.சரத்சந்திரா, கே.வசந்தமாரன், எஸ்.கலைவாணி, வி.சுபாசினி, எஸ்.கோமதி, கே.தமிழினி, பி.குமுதினி, எஸ்.சுமதி, எஸ்.லோகேஸ்வரி, ரி.கேதீஸ், கே.கிரிதரன், எஸ்.சந்திரகலா, ஆர்.ரமேஷ், பி.விஜி, பி.சஜி, பி.சந்தானயகி, ஆர்.அரவிந்தன், ரி.கவிதா, ஜி.கல்பனா, வை.கீமா, கே.செல்வராஜா, ரி.தீபகௌரி, எஸ்.கார்த்தியாகினி, டபிள்யூ. ஜெயமலர், என்.யசோதரா, எஸ்.தாட்சாயினி, எஸ்.வி.பிரபாளினி, எஸ்.எஸ்.விஜிதா, எஸ்.எஸ்.சாந்தி, ஆர்.எம்.எஸ்.ஜெயந்தி, ரி.ஜெய லஷ்மி, என்.உஷாநந்தினி, வை.செந்தூரன், எஸ்.கிருஷ்ணவதனா, எஸ்.காயத்திரி, ரி.பகீரதி, எஸ்.கலைச்செல்வன், எஸ்.சுகந்தினி, கே.வதனா, ரி.ஞானேஸ்வரி, வி.சுபாஜினி, பி.பிரியதர்சினி, எஸ்.முகுந்தன், எம்.சுதா, எஸ்.பாலசுகி, எஸ்.பிரபாஜினி, எம்.பிரபாகரன், பி.தமிழ்மாறன், எம்.தர்சினி, எஸ்.இராஜசேகரம், கே.சிவதாசன், கே.திருமாகல், டி.மேரி கிரீஸவரன், ஆர்.வத்சலா, ஜே.அஞ்சனா, ரி.ஜெயந்தினி, யு.விறிஜெட் நளாயினி, என்.உதயகுமார், எஸ்.கலைராணி, பி.கமலாகரன், பி.நிஷாந்தன், எஸ்.சங்கரதாஸ், ஆர்.குமரன், ரி.விஜிதா, எஸ்.தனுஜா, எம்.ஏ.சங்கர், எஸ்.ஜானகி, ஏ.சுபோஜினி, கே.விக்னராஜா, ரி.தீபா, கே.பெமினா, என்.நரேந்திரா, பி.ரேணுகா, என்.ரஜனி, கே.எஸ்.கலாவதி, எஸ்.சுதர்சன், எஸ்.சுநேத்திரா, ஜெ.பவித்ரா, ஜி.சிவாஜினி, கே.கஜந்தினி, எஸ்.ரோகினி, கே.அருள்விழி, கே.விமலினி, கே.தயாளினி, எஸ்.கர்ணன், எம்.அனித்தா, பி.பாலமகிந்தன், எம்.சுஜாதா, எஸ்.மரியஎடுக்சியா பிறியட், எஸ்.பகீரதன், எஸ்.மகேந்திரராஜ், எஸ்.குமுதினி, பி.ராதிகா, ஆர்.கிருஷ்ணானந்தன், எஸ்.சுதா, எஸ்.சிவகுமரன், ரி.சிவகுமரன், சி.சசிகலா, ரி.தர்சினி, சி.ஜே.ஜேசுராஜன், கே.சிவாஜினி, பி.சுபாசினி, எஸ்.தர்சினி, ஆர்.கிருஷ்ணகுமார், எம்.ஏ.நந்தலக்ஷ்மி, கே.கதிரமலை, எஸ்.சசிகலா, கே.ரேணுகா, ஆர்.சைலஜா, ஆர்.சமித்ரா, ஆர்.கஸ்தூரி, கே.கலையழகன், கே.கலையமுதா, எஸ்.சிவகரன், எஸ்.சுகன்யா, ஆர்.அகல்விழி, ஆர்.விஜயகுமாரி, ரி.உதயேஸ்வரி, கே.ஆர்.லங்கினி, எஸ்.தனுசா, எஸ்.பிரசாந்தி, கே.கலைவாணி, எம்.சுகுணேஸ்வரன், எம்.ரதீஸ்குமார், ரி.அருட்செல்வன், பி.கிருபாணந்தி, என்.கவிதாங்கனி, வி.தயாபரன், ஜி.அந்தோனி தவச்செல்வன், ஆர்.நளாயினி, எஸ்.சுகந்தினி, யு.ஜெயதாரணி, ஆர்.சாந்தி, வி.சிவாஜினி, கே.சிவநந்தினி, எஸ்.மனிகரன், எம்.சுகந்தன், என்.லோஜினி, கே.சிறிதரன், என்.சியாமளா, பி.அங்கயற்செல்வி, எஸ்.கே.விஜயபாலன், ரி.தவவாசுகி, ஜே.ராதா, ஆர்.நஜன், எஸ்.நவநீதகிருஷ்ணன், எஸ்.கல்யாணி, பி.நளாயினி, எஸ்.சிந்துஜா, பி.கமலதாசன், எஸ்.அகிலன், எஸ்.சுபதா, பி.மகேந்திரவர்மன், எஸ்.கௌசல்யா, ரி.உமையாள், எஸ்.கமலக்கண்ணன், எஸ்.விக்னேஸ்வரன், ஜி.பாமாராணி, ஆர்.திவிசா, எம்.அசோக்குமார், எம்.என்.நவநீதகிருஷ்ணன், பி.பகீரதன், எஸ்.குழலி, என்.பாலவதனி, எஸ்.விமலன், யு.ஞானசக்தி, என்.சி.உமாகாந்த், எம்.தபேந்திரன், எஸ்.வெண்மதி, எஸ்.சுபாஜினி, எஸ்.ஜெயதர்சினி, எஸ்.சுஜிதா, எஸ்.தேவிகா, பி.சுஜாதா, எம்.குமாரிகோசலை, ரி.தயாளினி, வி.சிவகுமார், எம்.ரோகினி, என்.கவிதா, எஸ்.சகஜா, ஆர்.சுதர்சினி, எஸ்.பக்தகௌரி, என்.கந்தலீலா, என்.சகிலா, எஸ்.செல்வநாயகம், கே.பாமினி, எஸ்.கல்பனா, என்.தர்சினிதேவி, வி.ஜெயதாசன், எம்.கணேசானந்தன், என்.சுதர்சன், என்.சசிந்தினி, பி.கௌரி, எல்.ஜோகராஜ், எஸ்.அபிராமி, கே.செல்வமகேசன், ஜே.சிவபாதசேகரம், எஸ்.சிவநேசன், ஜி.வாசுகி, எஸ்.கவிதா, கே.பிரேமளா, எம்.பிரசாந்தி, எம்.மதிவதனி, எஸ்.சரல்நவரோஜி, கே.தீபகுமார், எஸ்.துஷ்யந்தி, எஸ்.திலகவதி, கே.அனுராதா, எஸ்.சுகந்தினி, எம்.யசோதரதேவி, எஸ்.குகனேஸ்வரி, எஸ்.சிவானி, ஏ.சண்முகதாஸ், பி.சர்மிளா, ரி.சத்தியலோஜினி, எஸ்.மதினி, எஸ்.சஞ்சயன், எஸ்.யாமினி, ஆர்.சைந்தவி, வி.கே.ரவிகரன், எம்.சரஸ்வதி, எம்.அபிராமி, ஜி.அற்புதராஜ், பி.கோமதி, கே.உஷானந்தினி, கே.பாலமுருகன், எஸ்.கோகுலன், எஸ்.சாந்தினி, ஜே.சுஜிந்தா, எல்.ராம்ரமணன், ஆர்.கந்தலிங்கம், ரி.விஜயகௌரி, என்.ஜெயதீபன், ஆர்.சுஜீவா, கே.சசிகலா, எஸ்.செல்வதாஸ், ஜி.நர்மதா, கே.தங்கலஷ்சுமி, காயத்திரி கந்தன், ரி.ரமீலாதேவி, எஸ்.மஞ்சுசீதா, எஸ்.அனுராதா, எஸ்.உமாச்சந்திரன், ரி.எஸ்.தயாளன், ஜி.சந்திரநிபா, பி.கோமதி, எல்.மீரா, பி.பிரியதர்சினி, எஸ்.சகிலா, எஸ்.தியாகவதி, வி.ரி.எஸ்.சுபோகயன், எஸ்.வித்தியாதரன், கே.கோடீஸ்வரன், ரி.குமரதாஸ், ரி.ஜெசிற்றா, என்.ரஞ்சிதமலர், எஸ்.பாமினி, ஜி.பி.ஞானப்பிரகாசம், பி.மயூரன், ஜே.நிரோசானந்தி, எஸ்.சந்திரசேகர், என்.நாமகள், எஸ்.சிவஞானவதி, ஜே.வாசுகி, ஆர்.ரஜிகா, எஸ்.சுரேந்தினி, ஏ.கணேஸ்குமார், ஏ.அமுதினி, எஸ்.கவிதா, ஏ.சியாமிளா, பி.பிரசாந்தனன், ரி.வடிவரசி, சி.குகாயினி, ஏ.கோபிகா, எஸ்.யசோதரா, பி.அம்பிகைபாலன், எஸ்.சசிகுமார், கே.சசிகரன், கே.குமணன், சி.ராஜராஜேஸ்வரி, எஸ்.திருக்குமரன், ரி.ராதஜெயலக்ஷ்மி, கே.மோகனாம்பிகை, வி.வனஜா, டி.துஷ்யன், எம்.சந்திரதாஸ், எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, எம்.சிறிகாந்த், சி.துஷ்யந்தி, ஜி.நாமகள், எஸ்.சுடர்விழி, எம்.ராஜினி, எஸ்.சுகந்தி, கே.செந்தில்நாதன், எஸ்.சிவபாலன், ஆர்.சர்மிளா, எஸ்.சதீஸ், கே.பிரபாஞ்சலி, ஆர்.பொன்னம்பலம், ஜெ.சுதர்சனா, பி.யாழினி, ஜி.சிவனேஸ்வரி, எஸ்.சசிக்குமாரசர்மா, எஸ்.சர்மிலி, ரி.தயாளினி, எம்.ரமணன், ரி.செந்தூரன், ரி.சசிக்குமார், எஸ்.மாதங்கி.


### மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை.

# தமிழ் ஆசிரியப் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ, முழு நேரமாகவோ தமிழ்மொழி, தமிழ், இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக்கூடிய இரு பாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள்:**

1. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்.
2. தமிழ் பட்டதாரிகள்.
3. பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்றோர்.

**02. பட்டறிவு**

பத்தாண்டுகளுக்குக் குறையாத தமிழ் ஆசிரியப் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**03. அகவை**

40 தொடக்கம் 45 வரை

**04. வேண்டுகை முடிவுநாள்: 15.09.2004**

**05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**

பொறுப்பாளர்<br>மனிதவள மேம்பாட்டுப் பகுதி,<br>நாகதம்பிரான் வீதி,<br>கிளிநொச்சி.

06. நேர்முகத் தேர்விற்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகைதரவேண்டும்.

07. சம்பளம்: முழுநேர ஆசிரியராகத் தெரிவுசெய்யப்படுவோருக்கு தமைக்கும், பட்டறிவிற்குமேற்ப பத்தாயிரம் உருபாவிற்குக் குறையாத சம்பளம் வழங்கப்படும்.

08. நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் தங்களின் தபால் முகவரிக்குக் கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஆளுகை,<br>மனிதவள மேம்பாட்டுப் பகுதி,<br>நிதித்துறை.

(சி-2814)


## சாவகச்சேரி

கே.சத்தியப்பிரியா, கே.சந்திரரஜனி, பி.நவனகுமாரி, எம்.ரஜிதா, என்.அருட்செல்வி, எஸ்.சசிகலா, என்.திருச்செல்வி, எஸ்.ஜெகாநந்தன், வி.மதியழகன், பி.சசிதை, என்.சாமினி, சி.எஸ்.தயானந்தினி, எஸ்.செந்தூரன், கே.நாகேஸ்வரி, கே.கௌதா, ரி.சத்தியேந்திம்பிள்ளை, எஸ்.பற்குலேந்திரன், ஏ.சிவரஞ்சனி, கே.சசியோகா, எஸ்.ஜனாதனன், கே.பவானி, ரி.தர்மசீலன், வி.மங்களேஸ்வரி, எஸ்.வசந்தகுமாரி, வி.சுதர்சன், கே.வதனி, எஸ்.தர்சினி, ரி.விஜயகலா, பி.பாலகுமாரி, வி.சரவணந்தன், கே.உமாசுதன், என்.அருளேஸ்வரி, ஆர்.சுகிர்தா, எஸ்.சுதாஜினி, ரி.சுபாஜினி, கே.அனுஷா, கே.அகல்யா, எப்.ஜெனிற்றாபேர்ளின், பி.சிவசீலா, ஆர்.நந்தினி, எம்.ராசலிங்கம், ஜி.வளர்மதி, வி.சிறித்தா, எம்.நகுலேஸ்வரி, கே.கமலவாபு, டி.அஜித்தா, எஸ்.மஞ்சுளா, ரி.உமாநிதி, எம்.பாஸ்கரன், வி.உதயகுமாரி, எஸ்.திருச்செந்தூர்ச்செல்வன், கே.கணேஸ்வரன், எஸ்.சியாமளா, ஏ.சார்மினி, ஏ.சாமினி, ரி.சுந்தரரூபி, கே.வித்தியானந்தன், எஸ்.கருணாகரன், கே.சுகந்தா, ஆர்.நளினி, வி.உமாராணி, ரி.ஜீவநந்தினி, எம்.விமலரஞ்சினி, கே.மயூரன், எஸ்.கலைமகள், கே.கோமதி, வி.பாக்கியவதனி, வி.வசந்தநாயகி, எஸ்.சிவமணி, எஸ்.ராஜலோசனி, கே.கருணைச்செல்வி, எஸ்.தேவகி, வி.பரமேஸ்வரி, கே.கலைச்செல்வி, எம்.பாலரஞ்சினி, ஏ.ஆனந்தி, ஆர்.புனிதமலர், எஸ்.விஜயபாரதி, பி.சுகந்தி, எஸ்.சிவப்பிரியா, வி.சனந்தனன், ஏ.கணேஸ்வரன், பி.சனந்தனன், என்.சுபாங்கினி, ஆர்.ரஜனி, எம்.நிர்மலா, ரி.கிறிஸ்தோபர், வி.விஜயேந்திரன், எஸ்.வஜினா, ஏ.வினோதினி, எஸ்.கஜேந்தினி, பி.அகிலநாயகி, எஸ்.திரிபுரசுந்தரி, கே.சிவகுமார், பி.குசாந்தினி, பி.பிரபாகரன், ஏ.குமுதமனோகரி, சி.யசோதரா, எஸ்.அழகேஸ்வரன், கே.சஜிதா, எஸ்.குகதாசன், எம்.ஜெகதா, கே.விரதசாரணி, கே.குணரட்ணம், கே.மைதிலி, எஸ்.சுதாமதி, எம்.லினாஜ்குமார், கே.ஜேசுதா, எஸ்.உஷானந்தி, எம்.குகனேஸ்வரி, என்.கோகிலவதனி, எஸ்.சூரியகுமரன், கே.கந்தவேள், எஸ்.சிவரஞ்சன், கே.கலைவாணி, எஸ்.கமலினி, எஸ்.சிவனுஜா, எஸ்.ராஜேஸ்வரன், ஜி.கஜேந்தினி, எஸ்.வதனா, எஸ்.கருணாகரன், எஸ்.ரஞ்சனா, ரி.கிருபாணந்தி, ரி.முரளிதரன், எம்.சுதந்திரன், வி.நந்தகோபன், கே.காயத்திரி, எஸ்.வசந்தமாலா, ஏ.ஜெகனேஸ்வரி, எஸ்.ஜெசிக்குமார், கே.தவநேசன், வி.செல்வகுமார், எஸ்.சுதர்சன், கே.மகேந்திரன், கே.கணேசன், எஸ்.சிவசுதன், ரி.மனோகரன், வி.செந்தூரன், என்.மதுராகரன், வி.பி.நாகவதனி, வி.எழினி, ஜி.சுஜிதா, ஆர்.ராணிமலர், ஆர்.நாகநாதன், ஆர்.ஜாமிலா, பி.அகல்யா, எஸ்.வீரசுதாகரன், பி.பிரணவன், ரி.ஜெயராஜ், எம்.கமலாம்பிகை, எஸ்.கிருஷ்ணவேணி, கே.ராஜதுரை, ரி.சிவமதி, எஸ்.சுகந்தினி, ஆர்.பாஸ்கரன், எம்.தயாகுமரன், ஆர்.மங்களேஸ்வரன், எஸ்.துஷ்யந்தி, என்.லஷ்மணன், ரி.லம்போதரன், வி.மதிவதனி, எஸ்.தவராசசிங்கம், என்.சிவகௌரி, ஏ.நிருபாராணி, எஸ்.சுசிகரன், எஸ்.சிவகுமார், கே.சுபாசினி, ரி.மனோபவானி, கே.சுதாகினி, ரி.பிரதீபன், கே.வளர்மதி, என்.பாபுஜி, என்.துளசினி, என்.அகல்யா, கே.மதுரவசனி, ரி.பிரேமளா, என்.சுமதி, எஸ்.பிரேமனி, கே.யாழினி, கே.வாசுகி, கே.ரஞ்சிதமலர், ரி.தர்மினி, கே.சிவசுதானி, ஆர்.சதாசிவம், எம்.ராஜேந்திரம், எம்.சுதர்சினி, பி.சியாமினி, எஸ்.ரேகா, ஜி.கிருஷ்ணராணி, ஆர்.புஸ்பரூபி, பி.சுபாஜினி, வி.தயாசீலன், ஆர்.ஜனதன், ஜி.அகல்யா, எம்.மோகனதாஸ், எஸ்.சிவாஜினி, எஸ்.ஜெயந்தினி, பி.பார்த்தீவன், எஸ்.மதீஸ்வரன், என்.ஜெயந்தி, என்.ஜெயசீலன், ஜே.கவிதா, கி.நர்மதா, கே.தவசொரூபி, ரி.அங்கஷன், எஸ்.மேரிகிறிஸ்ரபெல், எஸ்.புவனதாஸ், கே.கார்த்தியாயினி, ஏ.மீனலோஜினி, கே.சுகந்தினி, எம்.சுமதி, எஸ்.சுபாசினி, எம்.மாதங்கி, கே.சிவகுமார், ஏ.சுகந்தினி, எஸ்.நளாயினி, ரி.தவலோஜினி, எஸ்.சிவலிங்கம், எஸ்.குணேந்தனி, எஸ்.ஜெகந்தன், எல்.தர்சனா, ஜே.ஆர்.நந்தினி, ஆர்.கந்தையா, ரி.வளர்மதி, ஆர்.ஜெயந்தினி, எஸ்.சிவநந்தினி, கே.குணரட்ணராஜா, வி.மதியானந்தன், ஜி.கலைமகள், ரி.சுதர்சினி, எஸ்.நேதாஜி, ஏ.திலீபன், வி.நாகரோகினி, கே.தீபா, ரி.சிவகுகன், எம்.ஏ.ஜே.ஜோசப்பின், என்.மிதிலா, ரி.கிருபாகரன், ஏ.பேர்ணாரெத், கே.நிலாந்தி, ஆர்.சுபாஜினி, எஸ்.வரதீஸ்வரி, எம்.தமிழ்ச்செல்வன், கே.சுதன், எஸ்.ஜானகி, வி.கவிதா, என்.விபுலன், எஸ்.ஸ்ரீதரன், ரி.கௌசல்யா, ரி.கோகுலகுமாரி, பி.ராகுலன், பி.நவகுலன், பி.சற்குணசீலன், எம்.வித்யா, பி.சியாமா, பி.சரஸ்வதி, ரி.சிறிநந்தினி, எம்.எஸ்.சுதர்சன், எம்.வி.நிறோசன், எம்.பிரபாகரன், எஸ்.பிரதீபன், சி.றாஜமோகன், பி.சுபாசினி, வி.கவிதா, என்.றாஜன், கே.ஜேசுதாசன், ரி.றஜிதா, பி.பத்மவேணி, எஸ்.சுபாஜினி, எஸ்.மயூரன், என்.சுகன்யா, ஆர்.விஜயயாழினி, பி.கவிதா, எஸ்.யசோதரன், என்.சோதிரூபன், ஜி.தவச்செல்வி, எஸ்.பவானி, கே.பகீரதிதேவி, ஏ.நளாயினி, எஸ்.அருள்மகேஸ்வரன், என்.கோமளா, எஸ்.எம்.டக்சினி, எஸ்.ரகுமான், கே.கனிமொழி, ஆர்.சிவநேசன், ரி.ஜே.குணராஜ், ரி.சண்முகதாஸ், பி.அனுசா, ஆர்.மைதிலி, பி.மகாதேவி, ஆர்.குமுதா, எஸ்.மாலினி, வி.அனுசா, ரி.மஞ்சுளா, எஸ்.புனிதவதி, என்.ஜெயகணேஷ், ஏ.சாந்தினி, எம்.ராசகுமார், எஸ்.கல்யாணி, எஸ்.தங்கராஜா, எம்.ரத்னவடிவேல், எஸ்.சுஜாதா, ரி.கஸ்தூரி, கே.சியாமளாதேவி, எஸ்.அன்ரன்புவனார்க்கஸ், கே.லலிதா, எஸ்.மகேஸ்வரி, ரி.யசோதா, ஆர்.மாலதி, எஸ்.செந்தூரன், எஸ்.மீரா, கே.பிரேமசுதா, வி.பவதரணன், எஸ்.ஸ்ரீலலிதா, எஸ்.தில்லைநாதன், எஸ்.பாமதி, எம்.பிரேமினி, கே.நகுலதாஸ், ரி.யூறிசன் ஜென்ராஜ், எஸ்.அமுதா, ரி.மேகலா, ரி.ராஜசிறிதரன், ரி.ராஜசிறிகாந்தன், கே.சிவனேஸ்வரி, ரி.அம்பிகைதாசன், ஏ.அகிலா, ஆர்.கருணாகரன், ஆர்.குகதாஸ், எஸ்.சதாரூபிணி, எஸ்.பிரதீபன், ஜே.சிலானி, பி.பிரபாகரன், பி.ரஜனி, ஆர்.அசோகன், எஸ்.வாசுகி, வி.ஈழமதனன், எஸ்.பகீரதன், ஆர்.சுஜாதா, வி.ஜெயரதன், கே.மங்களேஸ்வரன், கே.கிருஷ்ணகுமார், கே.ஆனந்தகிருஷ்ணன், பி.லலிதா, ஏ.ரசிகலா, ஏ.ராதிகா, ஆர்.ரமேசன், கி.தயாளன், ரி.ரமேஸ்வரன், எஸ்.ரங்கநாதன், பி.தாரகா, எஸ்.வைகுந்தன், ஆர்.நரேந்திரா, கே.ஞானதர்சினி, ஆர்.தயாபரன், எஸ்.சிவச்செல்வன், யு.சிவச்செல்வி, எஸ்.கோபிநாத், வி.கோபிராஜ், எஸ்.முகுந்தன், கே.கவிதா, கே.மலர்வதனி, ரி.சுதாரிணி, கே.சுதாகரன், எஸ்.சவுந்தரதேவி, வீ.வீரகுமார், எஸ்.சரோஜா, ரி.வாசுகி, வி.சிறிதரன், எம்.வைரவப்பிள்ளை, எஸ்.கஜாதிரா, வி.சுதர்சன், கே.மதிவாணன், ரி.சுகந்தி, கே.பானுமதி, ரி.ரதீஸ், பி.நிர்மலன், எம்.ஜெயக்குமார், ரி.சிவசாரன், என்.நளினி.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)


ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



(முக்கிய அறிவித்தல்)
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது
10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சேரன், சிநேகா நடித்த

ஆட்டோகிராவ்

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)

Strike Force

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்




தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## சிறு விளம்பரம்

### ஆட்டோ சாரதி தேவை

சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வரவும். M.G.M 777 K.K.S Road, Jaffna. (C/3025)

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல 777, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

## நாட்டில் குழப்ப நிலை; ஐ.தே.க குற்றச்சாட்டு!

(கொழும்பு)

நாட்டில் குழப்ப நிலையேற்பட்டு நீதியும், ஒழுக்கமும் சீர்குலைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சில நாட்களில் நாட்டில் கொள்ளைகள் உட்பட வன்செயல்கள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தடுக்க பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

பொலிஸ் ஆணைக்குழு மீது பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால், பொலிஸ் ஆணைக்குழுவைக் காப்பாற்ற ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொலைகளைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு ஆலோசனை

### பிரதமர் தெரிவிப்பு



தென்மாகாணத்தில் தற்போது ஏற்பட்டு வரும் கொலைச் சம்பவங் களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெருவிக்கையில்-

அரசியல் கட்சி பேதங்களைப் பாராது, கொலையுடன் சம்மந்தப்பட்டவர்கள் உடன் கைது செய்யப்படவேண்டும். பல பொலிஸ் நிலையங்கள் செயல் அற்றவையாக காணப்படுகின்றன. பலர் பொலிஸ் நிலையங்களில் தங்கியுள்ளனர். குற்றவாளி எந்தக் கட்சியை சார்ந்தவராயினும் அவரைக் கைது செய்வதற்கும் சுற்றிவளைப்பு மேற்கொண்டு, தேடுதல் நடத்த பொலிஸாருக்கு அனுமதியுண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

## பயிற்சி முடித்த பட்டதாரிகளுக்கு 3 மாதங்களில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

பயிற்சி வழங்கப்படும் சகல பட்டதாரிகளுக்கும் மூன்று மாதங்களுக்குப் பின்னர் நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இதுபற்றித் தெரிவிக்கையில்-

வரலாற்றில் இதற்கு முன்னில்லாதவாறு ஆரம்பிக்கப்பட்ட பாரிய திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

அரசாங்கச் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு பட்டதாரிகளுக்கு பயிற்சியளிப்பது, அரசாங்க சேவையின் தரத்தை உயர்த்தும் முதல் தொகுதியில் பதினேழாயிரத்து இருபத்து மூன்று பட்டதாரிகள் இன்று தமது பயிற்சியை ஆரம்பிக்க இருக்கின்றனர்.

இரண்டாவது தொகுதிப் பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியல் நேற்று வெளியாகியது. இதில் 24 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ள இவர்களுக்கான பயிற்சி அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்தப் பட்டதாரிகளை நிரந்தர சேவையில் அமர்த்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு ஏற்கனவே அங்கீகாரமளித்துள்ளது.

அரசாங்கத்துறை ஸ்தாபனங்களில உள்ள வெற்றிடங்கள் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளது. சில ஸ்தாபனங்களின் ஊழியர் கோப்பில் புதிய பதவிகளை அறிமுகம் செய்யும் சாத்தியமுண்டு.

ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைகள், பின்பற்றப்பட்டுள்ள இந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் கருத்துத் தெரிவிக்கையில்-

சுமார் 10 ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

பின்தங்கிய பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு அவர்கள் நியமிக்கப்படுவார்கள். தேசிய பாடசாலைகள், நவோதய பாடசாலைகள், மத்திய பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள சகல வெற்றிடங்களும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நிரப்புமாறு ஜனாதிபதி பணித்திருக்கின்றார் எனவும் தெரிவித்தார்.

## ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்

பண்டாரவளை பிந்துனுவெவ படுகொலைகளைக் கண்டித்து, பொகவந்தலாவை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்ததாகக் குற்றம்சாட்டி, ஹற்றன் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை ஹற்றன் நீதிமன்ற நீதிவான் விஜயரட்ன நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்து, குற்றம்சாட்டப்பட்டவர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ், ஊடகவியலாளர் சிறீதரன், முன்னாள் அம்பகமுவ பிரதேசசபை உறுப்பினர்களான இரா.இரட்ணராஜா, அருளப்பன் ஆகியோர் உட்பட பன்னிரண்டு பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த வழக்கில், சாட்சியங்கள் உரியமுறையில் நிரூபிக்கப்பட முடியாத காரணத்தால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் நீதிமன்ற நீதிவான் தனது தீர்ப்பின் போது தெரிவித்தார்.

## மருந்துப் பொருட்களுடன் லொறி தடுத்து வைப்பு

மட்டக்களப்பு வெல்லாவெளியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து, லொறி ஒன்றில் எடுத்து வரப்பட்ட மருந்து வகைகள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

லொறியினுள் கிரனைட் ஒன்றும் இருந்ததாக கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

இந்த லொறியில் காணப்பட்ட மருந்து வகைகள் அரசாங்க முத்திரைகளுடன் இருந்தன. லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

லொறியின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

### - ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு -

## ஐக்கிய தேசிய கட்சியே காரணமென்ற ஜே.வி.பியின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

(கொழும்பு)

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் பின்னணியில் ஐக்கிய தேசியக்கட்சி இருப்பதாக ஜே.வி.பி சுமத்திய குற்றச்சாட்டு அடிப்படையற்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நிராகரித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினதும், மத்திய வங்கியில் பணிபுரியும் அதிகாரி ஒருவரின் சூழ்ச்சியே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது. இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதாகவும் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சுனில் மெண்டிஸ் இந்த நிலைமை குறித்து பதில் கூறவேண்டும். ஏனெனில், மத்திய வங்கியின் ஆளுநர் தான் நிதிச்சபைகொள்கை, செயற்பாடுகளை தீர்மானிக்கின்றதுடன், அதிகாரி ஒருவரினால் டொலரின் பெறுமதியை அதிகரிக்க முடியுமாயின் அந்த அதிகாரியிடம் அரசாங்கத்தினை கையளிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இணையத் தொடர்புகளில் ஏற்பட்ட இடையூறு பின்னணியில் சதிவேலை இடம்பெற்றுள்ளதாம்

### - அமைச்சர் ஜெயரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் இணையத் தொடர்புகளில் ஏற்பட்ட இடையூறுகளின் பின்னணியில் சதிவேலை ஒன்று இடம்பெற்றிருப்பதாகத் தபால் தொலைத்தொடர்புகள் துறை அமைச்சர் டீ.எம் ஜெயரட்ண தெரிவித்தார்.

இந்தச் சதி வேலையுடன் தொடர்புடையவர்கள் குறித்து, உடனடியாக கருத்துத் தெரிவிக்க முடியாது, இது மிகப் பெரிய சக்தி ஒன்றின் துணையுடனேயே இந்தச் சதித்திட்டம் அமுலபடுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

கடலடி தொடு கம்பிகள் சேதப்படுத்தப்பட்டமையால், இணையத் தொடர்புகளில் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது. இதன் காரணமாக 5 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னதாக இந்திய நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான எம்.வி.நாகலாந்து என்ற கப்பல் கடலடி தொடு கம்பிகள் உள்ள பகுதியில் நங்கூரமிட்டமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, அந்த கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின்போது, இந்த சம்பவத்தில் குறிப்பிட்ட கப்பல் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு, அந்தக் கப்பல் தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த சம்பவம் குறிதது விசாரணைகளை மேற்கொள்ள மூவா கொண்ட விசேட குழுஒன்று அமைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விசாரணைகளின் முடிவில் கடலடி தொடு கம்பிகளைச் சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இனம் காணப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(தே)

## கிழக்கின் உதயம் மாநாடு ஜே.வி.பியின் ஏற்பாடாம்

வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு எதிராகவும், விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அலகுக்கு எதிராகவும் கிழக்கில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுவரும் கிழக்கின் உதயம் என்ற மாநாட்டை ஜே.வி.பியினரே ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராக கல்முனையில் கிழக்கின் உதயம் என்ற பெயரில் நடாத்தப் படவுள்ள மாநாட்டுக்கும், தமக்கும் எதுவிதத் தொடர்புகளும் இல்லையென கிழக்கை தளமாகக் கொண்ட முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஏற்கனவே தெரிவித்துவிட்டன.

கல்முனையில் நடைபெறவுள்ள இத்தகைய மாநாட்டைத் தொடர்ந்து, கிழக்கின் பல பகுதிகளிலும் இந்த மாநாட்டை நடாத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இருப்பினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக, இந்த மாநாட்டை ஒழுங்கு செய்வோர், பங்குபெற்றுவோர், பேச இருப்பவர்கள், ஏனைய மாநாடுகள் நடைபெறவுள்ள இடங்கள் போன்றவை ரகசியமாகப் பேணப்படுவதாக ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டில் ஈ.பி.டி.பி யின் மறைமுகப் பங்களிப்பும், ஆதரவும் இருக்குமென்றும் தெரியவருகிறது.

### - ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு-

## சிறிலங்கன் விமானப் பயணச்சீட்டுக்கு 50 வீத கட்டணக் கழிவு

சிறிலங்கன் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு தினத்தை முன்னிட்டு, பல நாடுகளுக்கு 50 வீதம் கட்டணம் குறைத்து விமானப் பயணச் சீட்டுக்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லண்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் சிங்கப்பூர் மற்றும் பாங்கொக் உட்பட இந்தியா, கிழக்காசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் செய்வோருக்கே இந்தக் கட்டணக்கழிவு வழங்கப்படவுள்ளது.

இந்தச் சலுகை செப்ரெம்பர் மாத காலப் பகுதிக்குள் பயணத்தை மேற்கொள்ளும் விமானப் பயணிகளுக்கு கிடைக்கும் சிறிலங்கா விமான சேவை தற்போது 23 நாடுகளுக்கிடையில் நடைபெற்று வருகிறது. (தே)

## மிலேனியம் சிற்றி உளவாளி படுகொலை மனைவியும் ஒன்றுவிட்ட சகோதரியும் கைது

மிலேனியம் சிற்றி இராணுவ உளவாளி திஸ்ஸ வீரசிங்கம் துஷ்யந்தன் அல்லது மதனன் என்பவரது கொலை தொடர்பாக அவரது மனைவி மற்றும் அவரது பெரிய தாயாரின் மகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ரமேஸைக் கொலை செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி வழங்கியதாக அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதாலேயே அவர்களைக் கைது செய்ததாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரமேஸ் கொலை செய்யப்பட்டதை அடுத்து மனைவியின் பெரிய தாயாரின் மகள் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலம் மற்றும் மனைவியின் வாக்குமூலங்களுக்கு இடையே முரண்பாடுகள் இருப்பதுடன், ரமேஸின் கொலை குறித்து இருவரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக குற்றங்களைத் தொடுப்பது ஆகிய காரணங்களால் மிகுந்த அவதானத்துடன் அவர்களைக் கைது செய்ததாகவும் அந்த உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ரமேஸின் மனைவி சுரேஸைக் கொலை செய்வதற்கு அவருக்கு விஷம் கலந்த உணவைக் கொடுக்க முயன்றார் என்றும், அதே வேளை கணவனுடன் கோபித்துக் கொண்டு பிள்ளைகளுடன் மட்டக்களப்புக்குச் செல்லும் போது, கணவனைக் கொலை செய்யும்படி புலிகளிடம் கூறியதாகவும், பெரிய தாயாரின் மகள் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஆனால், இதனை மறுத்த ரமேஸின் மனைவி தனது கணவரின் கொலைக்கு தனது ஒன்று விட்ட சகோதரியே காரணம் எனவும் தெரிவித்தார். (தே)



தென்கொரியாவில் நடைபெற்ற சமாதானத்துக்கான விளையாட்டு விழாவில், உயரம் பாய்தல் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்று கமலமோகனுக்கு - தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (101)

# சீன ஒலிம்பிக் குழுவினருக்கு பீஜிங்கில் செங்கம்பள வரவேற்பு!



ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் சாதித்த சீன வீரர் வீராங்கனைகள் நேற்று முன்தினம் பீஜிங் திரும்பினர். அவர்களுக்கு விமான நிலையத்தில் இராணுவ பான்ட் வாத்தியங்கள் முழங்க செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தமுறை ஒலிம்பிக்கில் சீனக்குழுவினர் தடகளத்தில் கூட ஆதிக்கம் செலுத்தினர். 32 தங்கம், 17 வெள்ளி, 14 வெண்கலம் பெற்ற சீனா பதக்கப்பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடம்பிடித்தது. ஒலிம்பிக் வரலாற்றில் இதுதான் சீனாவின் சிறப்பான செயற்பாடாகும்.

ஏதென்ஸில் இருந்து 245 பேர் கொண்ட சீனக் குழுவினர் விசேட விமானம் மூலம் தலைநகர் பீஜிங் வந்தனர். முதலில் குழுவின் தலைவர் யுவான் வெய்மின் இறங்கினார். இவரைத் தொடர்ந்து வீரர் வீராங்கனைகள் விமானத்தில் இருந்து இறங்க ரசிகர்கள் கர கோஷம் எழுப்பி உற்சாக வரவேற்பளித்தனர்.

மஞ்சள் மற்றும் சிவப்பு ஆடை அணிந்த நூற்றுக்கணக்கான கலைஞர்கள் ஆடிப்பாடி மகிழ்வித்தனர். இராணுவ பான்ட வாத்தியங்கள் இசைக்க - செங்கம்பள வரவேற்று அளிக்கப்பட்டது. மூத்த கம்யூனிஸத் தலைவர் சாங்சன் அனைவரையும் வரவேற்றார்.

பீஜிங் மேயர் வாங் கிஷோன் மலர்க் கொத்து கொடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

# தாச்சிப் போட்டியில் கலாஜோதி வெற்றி!

(சுதுமலை)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய 2004 ஆம் ஆண்டுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் காட்சி தாச்சிப் போட்டியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுதுமலை நாவலர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

காட்சிப் போட்டியில் யாழ்.தெரிவு அணியும், கிளிநொச்சி தெரிவு அணியும் விளையாடின. இதில் யாழ். தெரிவ் அணி வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியில் பங்குபற்றிய நவாலி தென்றல் அணியும் இணுவில் கலாஜோதி அணியும் வழங்கப்பட்ட நேரத்தில் சம புள்ளிகளைப் பெற்றமையால் மேலதிகமாக 5 நிமிடம் வழங்கப்பட்டது.

இதில் இணுவில் கலாஜோதி அணி 2 இற்கு 3 என்ற புள்ளியின் அடிப்படையில் வெற்றிபெற்று சுற்றுப்போட்டியின் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

### பிரேஸில் வீரர் தாக்கப்பட்டது தொடர்பான

# ஒலிம்பிக் மரதன் சர்ச்சை; முடிவு மாற்றப்படமாட்டாதாம்!

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் இறுதிப்போட்டியாக ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதலாவதாக ஓடிக்கொண்டிருந்த பிரேஸில் வீரர் லிமாவை, கிரேகக பாரம்பரிய உடையணிந்த ஒருவர் இடையில் புகுந்து பிடித்துத் தள்ளியதோடு தாக்கினார். இந்தச் சம்பவத்தால் நிலைகுலைந்துபோன லிமா மூன்றாவது இடத்தையே பிடித்தார்.



இவரைத் தாக்கியவர் அயர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் பாதிரியார் கார்னிலியஸ் ஹோரான் என்று தெரியவந்தது. மனநிலை சரியில்லாத இவருக்கு ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் தண்டணை நிறுத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே மரதன் வீரர்களுக்கு ஏதென்ஸ் ஒலிம்பிக் சபையினர் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை என்று பிரேஸில் குற்றம் சாட்டியதுடன் மரதன் போட்டியின் முடிவை எதிர்த்து சர்வதேச விளையாட்டு மன்றத்திடம் மனுத்தாக்கல் செய்தது.

இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் குழுவின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில் -

இந்தச் சம்பவம் மிகுந்த கவலையளிக்கிறது. ஒலிம்பிக் உணர்வுகளை மதித்துச் செயற்பட்ட லிமாவுக்கு உயரிய கௌரவம் அளிக்கப்பட்டது. நிறைவுவிழாவின் போது இவருக்கு நவீன ஒலிம்பிக்கின் தந்தையான டி.கூபர்டின் நினைவுப் பதக்கம் அளித்து உற்சாகப்படுத்தினோம். மரதன் முடிவை மாற்றுவது கடினம் என்றார்.

சர்வதேச தடகள கூட்டமைப்பும் மரதன் முடிவை மாற்றி அமைக்க வாய்ப்பில்லை என்று விளக்கம் அளித்துள்ளது.




# சக்லைன் முஷ்டாக்கிற்கு முழங்காலில் சத்திரசிகிச்சை!

பாகிஸ்தான் அணியின் சுழல்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்டாக்கிற்கு இரண்டாவது தடவையாக முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்படவுள்ளது.

முன்னதாக இந்த வருடம் இடது முழங்காலில் காயமுற்றதால், இவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. வலது முழங்காலில் அடுத்த மாதம் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஏப்ரலில் முல்டானில் நடந்த இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்த பின்னர் சக்லைன் முஸ்டாக் தேசிய அணியில் நிர்வாகத்தால் சேர்க்கப்படாமல் இருந்து வந்தார்.

இவர் டெஸ்ட் போட்டிகளில் 208 விக்கெட்டுக்களையும், ஒருநாள் போட்டிகளில் 288 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி!

(தம்புள்ள)

ரன்கிரி தம்புள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற 16 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில், யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணி 34.5 ஓவர்களில் 123 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அந்த அணி சார்பாக குகாஸ், அன்டோனியா ஆகியோர் தலா 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த விதுபாலா 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், வினோத் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 22.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அந்த அணி சார்பில் ஜனராஜ் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்று வவுனியா மாவட்ட அணியுடன் யாழ்.மாவட்ட அணி மோதவுள்ளது.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே வருடா வருடம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களிடமிருந்து கோரியுள்ளது.

டொனால்ட் கணேசகுமார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாக உள்ளதாகவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 5ஆம் திகதிக்கு முன்பாக 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முக வரியில் சமர்ப்பிக்குமாறும் போட்டி நிரல் அட்டவணை 12 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் எனவும் டொனால்ட் கணேசகுமார் சுற்றுப் போட்டிக் குழுத்தலைவர் ச.தவநேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக கழகங்களிடையே 50 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை ஏற்பாடு செய்த சென்றலைன்ஸ் விளையாட்டுக்கழகம், கடந்த 15 வருடமாக நடத்திவரும் இச் சுற்றுப்போட்டியில் கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழகம் சம்பியனாகவும், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றிருந்தன. (58)

# ஏழு முன்னணிப் பாடசாலைகள் பங்கேற்கும் சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி!

(மானிப்பாய்)

வடக்கின் ஏழு முன்னணிப் பாடசாலைகள் இணைந்து சமாதானத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியொன்றை நடத்துவதற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஏற்பாடு செய்துள்ளது.

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டுமென்ற நல்லுறவின் அடிப்படையில் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, மன்னார் சென். பீற்றர்ஸ் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் கல்லூரி ஆகியன இணைந்தே மேற்படி உதைபந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

இன்றுமுதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இந்த உதைபந்தாட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இந்தச் சமாதான உதைபந்தாட்டம் ஆரம்பமாகும்.

இந்தப் போட்டியில் - காலை 8 மணிக்கு மன்னார் புனித சேவியர் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

இறுதிப்போட்டி எதிர்வரும் நான்காம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(58, 100)


வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்

THE VANNI AGROTECHS

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் விற்பனைக்குப் பிந்திய சேவை

ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை வட்டக்கச்சியில் நடைபெறும் பொருண்மியக் கண்காட்சியின்போது "பிறவுண்" அன் கம்பனியும் "ஹேலீஸ் அக்ரோ புரொடக்ஸ் நிறுவனத்தையும் இணைத்து எம்மால் விற்பனை செய்யப்பட்ட 'ரபே - TAFE', உழுபொறிகளுக்கும், 'ஹெஸ்பிறே - Hayspray' தெளிகருவிக்குமான விற்பனைக்குப்பிந்திய சேவையை வழங்கவுள்ளோம்.

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன்பெறுமாறு அனைத்து வழமையாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் : ஒருங்கிணைந்த மாதிரி விவசாயப்பண்ணை

காலம் : 02.09.2004 - 04.09.2004

தொலைபேசி இல : 2285745, தொலைநகல் : 2285746.

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்,
கண்டிச்சாலை, கிளிநொச்சி.

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரை, பேச்சு போட்டி!

## பவ்ரல் அமைப்பு ஏற்பாடு

எதிர்வரும் டிசம்பர் 11 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, பவ்ரல் அமைப்பு நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரணதர, க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கல்விகற்கும் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது. பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள், மாவட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றமுடியும்.

கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என்ற மட்டங்களில் நடைபெறவுள்ள போட்டிகளில், கனிஷ்ட பிரிவில்- க.பொ.த. சாதாரண மாணவர்களும், சிரேஷ்ட பிரிவில் க.பொ.த. உயர்தர மாணவர்களும் பங்குபற்றமுடியும்.

கட்டுரைப் போட்டிகளுக்கு -

கனிஷ்ட பிரிவுக்கான தலைப்பு 'மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்' என்பதாகவும், சிரேஷ்ட பிரிவினருக்கு 'மனித உரிமையானது ஜனநாயகத்தின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும்' என்ற தலைப்பிலும் கட்டுரைகளை வரைந்தனுப்பலாம்.

கட்டுரைகள் யாவும் ஆயிரம் சொற்களுக்கும், ஆயிரத்து 250 சொற்களுக்கும் இடைப்பட்டதாக இருப்பதோடு, அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டும் அனுப்பப்படுதல் வேண்டும்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியாகவே போட்டி நடத்தப்பட்டு, மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் தெரிவுசெய்யப்படும் முதல்மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் முதல் 25 கட்டுரைகளுக்கு - பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

பேச்சுப் போட்டியைப் பொறுத்தவரை - பங்குபற்ற விரும்பும் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும், ஒவ்வொரு பிரிவுக்கும் தலா ஒவ்வொருவர் வீதம் இரு மாணவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும். இந்தப் போட்டியிலும் முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள், வெற்றிக் கேடயங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படுவதோடு, முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் தேசிய ரீதியிலான போட்டிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

இந்தப் போட்டியும் மும்மொழிகளிலும் தனித்தனியாக நடத்தப்படவுள்ளது. மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், நல்லாட்சி போன்ற விடயப் பரப்புக்களில் இருந்து போட்டி நிகழ்வின் போது தரப்படும் தலைப்பிற்கு அமைய, தமது கருத்துக்களை ஐந்து நிமிடத்துக்கு வெளிப்படுத்தக்கூடியவராக போட்டியாளர் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக்கங்களும் விண்ணப்பங்களும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக, பவ்ரல், இல. 93/10, துட்டகமுனு வீதி, கொழும்பு - 6 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (31)



கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 30 ஆவது நிறைவையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் சமுர்த்தி வங்கியின் காசாளர் சி.சிவகாந்தன் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (12)

# வீட்டு நூலகம் தொடர்பான விபரங்களை கல்வி அமைச்சுக் கோரியுள்ளது

இலங்கையில் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள குடும்பங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதையும், வீட்டு நூலக கலாசாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, கல்வி அமைச்சின் தேசிய நூலக அபிவிருத்திச் சபையினர் குறைந்தது 250 புத்தகங்களுக்கு மேல் வைத்திருக்கும் வீட்டுரிமையாளர்களது விபரங்களைத் தங்களிடம் பதிந்துதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வீட்டுரிமையாளர்களது பெயர், முகவரி, தொழில், புத்தகங்களது விபரம் என்பனவற்றையும், மிகவும் பழைய புத்தகங்கள் இருப்பின் அது பற்றிய விபரம், ஏட்டுச் சுவடிகள் இருப்பின் அவற்றினது விபரங்களையும் குறிப்பிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்,

ஏ.டி.எல்.சுதர்மா டி சில்வா, செயலாளர், இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை, கல்வி அமைச்சு, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

இந்த விபரங்களுடன், தினசரி கொள்வனவு செய்யும் பத்திரிகைகள், வீட்டில் பயன்படுத்தப்படும் தொலைக்காட்சி, வானொலி, கணினி போன்றவை பற்றியும், வாசிப்புக்கு இவைகளால் இடையூறு ஏற்படுகையில் கையாளும் நடைமுறைகள் பற்றியும் குறிப்பிடும்படியும் கோரப்பட்டுள்ளது. (31)

# வல்லிபுர ஆழ்வார் கோவிலில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் ஆண்டு தோறும் இடம்பெற்றுவரும் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு விசேட அபிஷேக ஆராதனையுடன் நடைபெறவுள்ளது.

ஆலய முன்றலில் இரவு 8 மணிக்கு 'நமக்கே பறை தருவான்' எனும் தலைப்பில் ஆசிரியர் ஆ.சிவநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவதைத் தொடர்ந்து, கலைஞான மாமணி சத்தியதாஸ் குழுவினரின் 'பார்வதி திருக்கல்யாணம்' என்னும் தலைப்பில் வில்லிசை இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு - கண்ணன் பிறப்பு விஷேட அபிஷேகம் 1008 சங்காபிஷேகம், குழந்தை தாலாட்டுப் பாடல், குழந்தை நாள் நிவேதனம் வழங்கல் என்பன நடைபெற்று, அதிகாலை 5 மணிக்கு சக்கரத்தாழ்வார் பூந்தண்டிகையில் வெளி வீதி வலம் வருவார். தொடர்ந்து வடக்கு வீதியில் கண்ணன் வெண்ணெய் திருடும் உறியடி உற்சவம் நடைபெறும்.

அடியார்களின் நலன்கருதி, பொலிகண்டி வாகன உரிமையாளர்கள் பருத்தித்துறையில் இருந்து ஆலயத்துக்கு இரவு 8 மணி வரையும் பின் ஆலயத்தில் இருந்து பருத்தித்துறைக்கு அதிகாலையிலும் இலவச போக்குவரத்து சேவையை வழங்கவுள்ளனர்.

## சொற்பொழிவு

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில், நாளை 'திருவும் உருவும்' என்னும் தலைப்பில் தேசிய இளைஞர் மன்ற யாழ். மாவட்ட இணைப்பாளர் சிவதெட்சணாமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

## எழுதுவினைஞர்களுக்கு பயிற்சி நெறி

எழுதுவினைஞர்களுக்கான பயிற்சி ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று ஆரம்பமாகியது. இந்தப் பயிற்சிநெறி இன்றும் நடைபெறவுள்ளது.

கடந்தமாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட எழுதுவினைஞர்களுக்கான பயிற்சிநெறியில் கலந்து கொள்ளாதவர்களுக்கே இந்தப் பயிற்சிநெறி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் யாழ்.செயலக அதிகாரிகள் பல் வகுப்புக்களை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## ஒன்றுகூடலும் கலை நிகழ்வும்

உரும்பிராய் திருமறைக் கலாமன்றத்தின் மாதாந்த ஒன்றுகூடலும், கலைநிகழ்வும் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்ற இளைஞர் அவையும் இணைந்து நடாத்தவுள்ள இந்த ஒன்றுகூடலில் உரும்பிராய் சென். மைக்கல் ஆலய இளைஞர் அவையும் கலந்துகொள்ளவுள்ளதாக உரும்பிராய் திருமறைக் கலாமன்றச் செயலாளர் பற்றீசியா தெரிவித்தார். (91)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலையின் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு செப்ரெம்பர் மாதம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளது.

இந்த முறை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள சமூகக் கல்வியும் வரலாறும் பாடத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள்-

இணுவில் இந்துக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலம், உடுவில் முருகானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக, உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (91)

# வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே மருதங்கேணி சந்தை இயங்குகிறது

வடமராட்சி கிழக்கில் இயங்கிவரும் ஒரேயொரு சந்தையான மருதங்கேணி சந்தை, தற்போது வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இயங்கிவருகின்றது. செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களிலேயே சந்தை நடைபெறுகிறது. மிகுதி நாட்களான திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நாட்களிலும் சந்தை இயங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இந்தச் சந்தையை இயங்க வைக்க வேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், கடந்த கால போர்ச் சூழலால் இந்தச் சந்தை சேதமடைந்தது. இந்த வருட முற்பகுதியில் சந்தைக்கு புதிதாக கட்டடம் அமைக்கவென இடங்கள் துப்பரவு செய்யப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.அபிநயா
முகவரி : றோஸ் பவனம் அல்வாய்

முதலாவது அகவையில்



பெயர் : ச.ரதுஷன்
முகவரி : பேர்லின் சுவிற்சர்லாந்து

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## வலிகாமம் வலய அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடம் தொடர்பான விளக்கமளிக்கும் செயலமர்வு, எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 2 மணி வரை வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளால் நடத்தப்படவுள்ள இந்தச் செயலமர்வில், உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (91)

## மருதங்கேணி கூட்டுறவுக் கடையில் பொருட்களின் விலை அதிகம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகளில், தனியார் கடைகளிலும பார்க்க சில அத்தியாவசியப் பொருட்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், மருதங்கேணி கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கூடுதலாக விற்கப்படுவதால், மக்கள் விசனம் அடைந்துள்ளனர். கூட்டுறவு மக்களின் சேவை எனக் கூறப்படும்போதும், அங்குதான் கூடுதலான விலையில் பொருட்கள் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

### இலங்கை தமிழ் சினிமா

# தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்

## வி. பி. சிவநாதன் தெரிவிப்பு

சினிமாச் சட்டத்தின் ஒவ்வொரு புள்ளியையும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதிலேயே, நல்ல சினிமாவின் உருவாக்கம் தங்கியுள்ளது.

ஒவ்வொரு சட்டமும் கலாபூர்வமாக அமையுமாயின், அந்தப்படம் தத்ரூபமான கலைப் படைப்பாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை. சினிமாவை நாம் எமது வல்லமைக்காகப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் நல்ல பல சமூக அரசியல், பொருளாதார மாற்றங்களைக் காண முடியும். சக்திவாய்ந்த ஊடகமான சினிமா - சாதாரண மக்களை மிக இலகுவாகச் சென்றடைந்துவிடுகிறது என, பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சலன சித்திரம் அமைப்பின் திரைப்படத் தொழில்நுட்பச் சான்றிதழ் கையளிப்பு நிகழ்வு கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

சினிமா மக்களின் வாழ்வில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தி வருகிறது. எனவே, சினிமாவை வெற்றிகரமாகக் கையாள்வதன் மூலமாக சமூக பொறுப்புணர்வுள்ள மனிதர்களை உருவாக்கமுடியும்.

சினிமா என்பது ஒரு மொழி. அதேவேளை, அது மொழிசார்ந்த கலையாகவும் இருக்கிறது. இந்த ஊடகத்தை எமது பிரச்சினைகளை வெளிக்கொணரும் ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்பும் முயற்சிக்கு இலங்கைத் தமிழ்ச் சினிமா களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். தமிழ் மக்களின் அகதி வாழ்வு, அல்லோலங்கள், உயிரிழப்புக்கள், தியாகம் என்பவை ஒளியால் எழுதப்படவேண்டும்.

தமிழ் சினிமாவில் விருது பெறக்கூடிய சினிமா ஈழத்திலிருந்துதான் உருவாகவேண்டும். அது பல வெற்றிகளைப் படைக்க வேண்டும். சினிமா வருமானமீட்டக்கூடிய பாரிய தொழில்துறையாகவும் விளங்குவதால் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கும்.

சமூகச் சீரழிவுகளுக்கு எடுத்த எடுப்பிலேயே சினிமாவை குறைகூறும் போக்கு தவிர்க்கப்படவேண்டும். காலாபூர்வமாக எடுக்கப்படும் படங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கின்றன. மக்களின் ரசனை உயரும்போது வர்த்தக ரீதியான மசாலாப் படங்கள் தாமாகவே நின்றுவிடும் என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரும், சலனசித்திரத்தின் ஸ்தாபகருமான க.தேவதாசனும் உரையாற்றினார். 'வெண்சங்கு' படத்தில் நடித்த கலைஞர் ச.புவனேஸ்வரன் கௌரவிக்கப்பட்டார். அறிமுகவுரையை எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தியும், வரவேற்புரையை ச.நிமலனும், நன்றியுரையை வி.எஸ். சிவனேசனும் நிகழ்த்தினர்.



# பொருண்மியம்

# அழகிற்காக மட்டுமல்ல வருமானமீட்டக் கூடிய ரோஜா மலர்ச்செடி உற்பத்தி

சுயதொழில் முயற்சிகள் பல உண்டு. அவற்றில் சில - முழுநேர சுய தொழிலாகவோ அல்லது பகுதி நேர சுயதொழிலாகவோ மேற்கொள்ள முடியும்.

இவ்வாறான சுய தொழில்களில் ஒன்று மலர்ச்செடி உற்பத்தி. அதிலும் குறிப்பாக, ரோஜா மலர்ச்செடி உற்பத்தி - சிறந்த இலாபத்தைப் பெற்றுத் தரும் ஒரு தொழிலாக மாறிவருகிறது.

இந்த உற்பத்திக்கு சிறந்த இடங்களாக, கடல் மட்டத்திலிருந்து 1200 அடிக்கு மேற்பட்ட பிரதேசங்கள் உகந்தவை.

இதற்குத் தேவைப்படும் காற்றின் ஈரத்தன்மை 65% - 75 வீதத்துக்கிடையில் ஆகும். இரவு பகல் இரண்டுக்கும் தேவையான வெப்பநிலை $15^{\circ}$ - $25^{\circ}$ செல்சியஸ் இடையில் இருக்கவேண்டும்.

சிறப்பாக ரோஜா மலர்ச்செடிக்கு, வளமான மண் தேவைப்படுகிறது. அதேபோல் நல்ல காற்று, நீர்வடிந்து போகும் மணல் அல்லது செம்மண் உகந்தது.

ரோஜா பயிரிடும் முறைக்கு பல விதமான மண் கலவைகள் தயாரித்துக்கொள்ளலாம். சில மண் கலவைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகிறது -

ஒரு பங்கு மண், ஒருபங்கு உக்கிய இலைகுழைகள், அரைப்பங்கு உக்கிய சாணம், அரைப்பங்கு மணல் மண்.

இதற்கு ஆரம்பத்தில் இரசாயன உரக்கலவை மூன்று நாட்களுக்கு முன்னர் பாவிக்க வேண்டும்.

பூச்சாடிகளைப் பயன்படுத்தி ரோஜா மலர்ச்செடி உருவாக்கும் பொழுது, பயன்படக்கூடிய பூச்சாடி மண் கலவைகள் வருமாறு -

**முறை 1**

1. செம்மண் - 1 பங்கு,
உக்கிய இலை, குழைகள் - 1/3 பங்கு
உக்கிய சாணம் - 1/2 பங்கு
மணல் - 1/2 பங்கு
சாம்பல் - 1/6 பங்கு



**முறை 11**

உக்கிய சாணம் - 6 பங்கு
செம்மண் - 4 பங்கு
மணல்மண் - 3 பங்கு
சாதாரண மண் - 2 பங்கு

இவற்றுக்கு உபயோகிக்கும் உரக் கலவை -
அமோனியம் சல்பேட் 2 கிலோகிராம்,
ரிப்பல் சுப்பர் பொஸ்பேட் 2 கிலோகிராம்,
சல்பேட் ஒப் பொட்டாஸ் 1 கிலோகிராம்.

இந்தக் கலவை 75 கிராமை ஒரு செடிக்குப் போடவேண்டும். இதனை 2-3 மாதங்களுக்கு ஒரு தடவை இடுவதன் மூலம் மிகச் சிறப்பான பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால், மியூரியெட் ஒப் பொட்டாஸ் அதிகமானால், பூக்கள் அழுகி விடும் நிலை ஏற்படலாம். ஒரு நாளைக்கு ஒரு தடவை நீர் விநியோகிப்பது நன்று.

**ரோஜாச்செடி ஒட்டும் முறைகள் பலவிதமானது.**

ரி ஒட்டுதல், வி ஒட்டுதல் போன்ற ஒட்டு முறைகள் பயன்படுத்தப்படுகிறது.

ஒட்டுவதற்குப் பயன்படுத்தும் செடியைத் தேர்ந்தெடுக்கும்போது, 8 அடி நீளமாக வளர்ச்சியடைந்த தண்டுள்ள செடியாக இருகக வேண்டும். ரோஜாச் செடிகளை வெட்டும்போது மூன்று விதமான முறைகள் பயன்படுத்தப் படுகிறது.

அவையாவன -

1. சாதாரண வெட்டு
2. மத்திய வெட்டு
3. பெரும் வெட்டு

**சாதாரண வெட்டு**

நோய் உண்டாகியிருக்கும், உடைந்து முறிந்து இருக்கும் முக்கிய கிளையின் 2/3 பங்கு வெட்டி நீக்கப்படவேண்டும்.

**மத்திய வெட்டு**

இதற்கு 3 வருடங்களான செடிகளைப் பயன்படுத்தப்படும். முக்கிய கிளையின் அரைப் பகுதியை வெட்டி நீக்கப்படுவதோடு,



நோய்த்தாக்கம் ஏற்பட்ட கிளைகளை முழுமையாக வெட்டி நீக்கலாம்.

**பெரும் வெட்டு**

இதற்கு 7 வருடங்களான செடிகளைப் பயன்படுத்தமுடியும். அனைத்துக் கிளைகளையும் வெட்டமுடியும்.

மேற்குறிப்பிட்ட ஒரு வெட்டு முறையைப் பயன்படுத்திய பின்னர் - உரமும், நீரும் ஏற்றவாறு பாவிக்க வேண்டும். மழைகாலம், வரண்ட வெயில் காலத்தில் ஒட்டுமுறை தவிர்க்கப்பட வேண்டும்.

ரோஜா மலர்ச்செடிக்கு பங்கசு நோய்கள் போலவே, வைரஸ் நோய்களும் ஏற்படும். கறுப்புப்புள்ளி நோய், பூஞ்சண நோய்கள் ஏற்பட்டவுடன், தகுந்த ஆலோசனைகள் பெற்று, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லையெனில், முழு உற்பத்தியும் பழுதடைய இடமுண்டு.

இலைகள் உண்ணும் மயிர்க்கொட்டிகள், பூக்களைப் பாதிக்கும் மயிர்க்கொட்டிகள், நீரை உறிஞ்சிக் குடிக்கும் பீடைகள் முக்கியமானவையாகக் கருதப்படுகிறது. செடி உண்ணிகள், அட்டைகள், மாமுட்டைப் பூச்சி போன்றவை மேற்குறிப்பிட்ட நுரை உறிஞ்சிக் குடிக்கும் பீடைகளினுள் அடங்குகின்றன. மேலும் மைடா என்ற பீடையையும் குறிப்பிட முடியும்.

இவற்றுக்குத் தகுந்த ஆலோசனைகளைப் பெற்று, இரசாயனக் கலவை கிருமிநாசினியைப் பயன்படுத்தலாம்.

அழகுக்காக மட்டுமல்ல, நன்றாக வருமான மீட்டக்கூடிய ஒரு தொழிலாகவும் ரோஜா மலர்ச்செடி உற்பத்தி காணப்படுகிறது.

சசி சந்திரகாசன்

# போஷாக்கு நிறைந்த பயிற்றங்காய் உற்பத்தி

கொடிகளாகவும், புதர்களாகவும் வளரக் கூடிய பயிற்றங்கொடி பலதரப்பட்ட வகைகளில் காணப்படுகிறது. இதனுடைய வேர்களில் உள்ள வேர் முடிச்சுக்கள் - மண்ணில் நைதரசனின் அளவை அதிகரிக்கக்கூடியது. இதன் காரணத்தால், மண்ணின் வளம் அதிகரிக்கின்றது.

ஆழமாக வளரும் பயிற்றங்கொடியின் வேர்கள் - மண்ணின் சமநிலையையும் அதிகரித்துக் கொள்வதற்கு உதவிபுரிகின்றது. புரதம், காபோவைதரேட், கனிப்பொருட்கள் மற்றும் விற்றமின்கள் இதில் அடங்கியுள்ளதால், மிக உயர்ந்த போஷாக்குள்ள மரக்கறியாக பயிற்றங்காய் காணப்படுகிறது.

தாழ்ந்த ஈரவலயப் பிரதேசங்களில் பயிற்றங்காய் வகைகளை சிறப்பாக உற்பததி செய்யலாம். இதற்கு மண்ணில் 56-70ph (கார அமிலத் தன்மை) அளவு இருந்தல் நன்று. விசேடமாக மணல் கலந்த செம்மண் பயிற்றங்காய் உற்பத்திக்கு சிறந்ததாகும். களி மண்ணும், சீரற்ற நீர் விநியோகமும் இந்தப் பயிருக்கு உகந்தல்ல.

பயிற்றங்காயில் பல வகைகள் உண்டு. ஒவ்வொரு பயிற்றங்காயும் ஒவ்வொரு சிறப்பம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது. இவற்றைப் புதர்வகைகள், கொடிவகைகள் என இரு பிரிவாகப் பிரிக்கமுடியும்.

புதர்வகை பயிற்றங்காயை, ஒரு நிலையத்தில் - ஒரு விதையை விதைப்பதாயின், ஒரு ஹெக்ரெயருக்கு 17-20 கிலோகிராம் விதைகள் தேவைப்படும்.

கொடிவகை பயிற்றங்கொடி விதைகளை விதைபபதாயின், ஒரு நிலையத்தில் 2-3 விதைகளைச் சேர்க்கவேண்டும். ஒரு ஹெக்ரெயருக்கு 16-20 கிலோ கிராம் விதைகள் தேவைப்படும்.

ஒழுங்கமைக்கப்பட்ட பாத்திகளில் புதர்வகை பயிற்றங்காயை விதைப்பதாயின், 60-70x20 சென்ரிமீற்றர் இடைவெளிகளிலும், கொடிவகைப் பயிரெனின் 90x30 சென்ரிமீற்றர் இடைவெளிகள் இருக்குமாறு விதைகளை விதைக்க வேண்டும்.

## நிலத்தைப் பண்படுத்தல்

தேர்ந்தெடுத்த நிலத்தை 15-20 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு வெட்டிப் புரட்ட வேண்டும். மழை நீரைப் பயன்படுத்துவதாயின், தட்டையான அல்லது உயர்நத பாத்திகளை ஒழுங்கு பயிரை உற்பத்தி செய்வ தாயின், வாய்க்கால் அல்லது விளம்பு முறையைப் பயன்படுத்தலாம்.



வரண்ட கால நிலையாக இருந்தால், விதைகள் முளைக்கும் வரை நாள்தோறும் நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டும். நீர் விநியோகித்த பினனர் பொலித்தீன் பையால் மூடுவதனால், மண்ணில் உள்ள நீர் - சூரிய வெப் பத்தால் ஆவி யாவது தடுக்கப்பட்டு, மண்ணின் ஈரலிப்புத் தன்மை பாதுகாக்கப்படும்.

விதைகள் முளைவிட்ட பின்னர் நான்கு நாட்களுக்கு ஒரு தடவையும், அதன பின்னர் ஏழு நாட்களுக்கு ஒரு தட வையும் நீர் விநியோகிக்க வேண்டும். தேவையற்ற அல்லது மேலதிக நீர் விநியோகம் இந்தப் பயிருக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

## களைகளை நீக்குதல்

விதைகளை முளைக்க வைத்து 2 வாரமோ அல்லது 4 வாரமோ சென்ற பின்னர் களைகளை நீக்கி, கொடிகளின் வேருக்கு அடியில் மண்ணைச் சேர்க்க வேண்டும்.

## நோய்த் தாக்கமும் தடுப்பு முறைகளும்

**1. தண்டு அழுகல் நோய்**

இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, செடிகள் வாடுவதுடன், தண்டின் கீழ்ப் பகுதி மண்நிறமாக மாறும். பின்னர் செடி முழுவதும் அழுகிவிடும். வேர்களின் வளர்ச்சி பலவீனப்பட்டிருக்கும். பங்கஸ தண்டின் கீழ்ப்பகுதியில் படர்ந்திருக்கும். அதன்மூலம் நோயை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

நோய் வராமல் தடுப்பதற்கு பயிர்களை மாற்றுதல், நீர் விநியோகம் மேற கொள்ளுதல், நைதரசன் அடங்கிய உரம் அதிகமாகப் போடுவதைத் தடுத்தல். அத்துடன் தகுந்த கிருமிநாசினி ஒன்றை உபயோகித்துத் தடுத்துக்கொள்ளலாம்

**2. வேர் அழுகல் நோய்**

நுண்ணங்கிகளால் செடியின் தண்டின் கீழ்பகுதி நிறம் மாறும். செடியைப் பிடுங்கிப்பார்த்தால், வேர்கள் அழுகி இருப்பதைக் காணலாம். நோய் வராமல் தடுப்பதற்கு விதைப்பதற்கு முனனர் விதைகளுக்கு மருந்துகள் போட்டு ஆரோககியமான விதைகளாக மாற்றுவது, நோய் ஏற்பட்ட பின்னர் தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

## பீடைத்தாக்கம்

**1. ஆக்றோமைசா இலையான்**

இவை சிறகு உள்ள சிறிய கறுப்பு நிறமான இலையான்கள். இலைகளின் மீது முட்டைகள் இடும். முட்டைகள் பொரித்து வெளிவரும் பீடைகள் - தண்டின் அடியில் சென்று, மண்மட்டத்தில் கூடுகள் அமைத்து, அதனுள் சென்றுவாழும். இதனால், செடிக்கு பாதிப்பு ஏறபடுவதுடன், அவை வாடி, இலைகள் உதிரும்.

**கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்தி நோயைத் தடுக்கலாம்.**

**2. காய்களை துவாரமாக்கும் மயிர்க்கொட்டி**

பூப்பூக்கும் காலகட்டத்தில் -பூ மொட்டுக்கள், பூக்கள் மீது இவற்றின் முட்டைகளைக் காணலாம். பின்பு மயிர்க்கொட்டிகளைக் காணலாம். இவை காய்களை துவாரமாக்கி, காய்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்தி இவற்றைத் தடுத்துக்கொள்ளலாம்.

கொடிவகை பயிற்றங்காய்களுக்கு, இரண்டு வரிசைகளை இணைக்கும் வண்ணம் தடிகளை நட்டு, பந்தலாக அல்லது தனித் தடிக்கொடிகளாகச் சுற்றிவிட வேண்டும். நைதரசன் உரம் அதிகமாகி இலைகள் பாதிக்கப்பட்டு இருந்தால், இலைகளை நீக்கி பயிர்களை வளர்ச்சி அடைய வைக்கலாம்.

## விளைச்சல்

ஒவ்வொரு வகைக்கு ஏற்றவாறு அதனுடைய விளைச்சல்கள் இருக்கும்.


அதற்கேற்றவாறு விளைச்சலைப் பெற்றுக் கொள்ளலாம். விளைச்சலைப் பெற்ற பின்னர் பயிற்றங்காய் கட்டு ஒன்று 500 கிராம் இருக்குமாறு கட்டி, சந்தைக்கு அனுப்ப

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| மரக்கறிகள் | பருத்தித்துறை | சங்கானை | சுன்னாகம் | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 25/= | 30/= | 20/= | 20/= | 40/= | 25/= | 30/= | |
| வெண்டிக்காய் | 20/= | 10/= | 10/= | 15/= | 30/= | 20/= | 30/= | |
| உருளைக்கிழங்கு | 80/= | 80/= | 80/= | 80/= | 70/= | 60/= | 80/= | |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= | 30/= | 50/= | |
| பாகற்காய் | 30/= | 35/= | 40/= | 40/= | 40/= | 30/= | 50/= | |
| கரட் | 60/= | 60/= | 60/= | 50/= | 70/= | 60/= | 50/= | |
| பீற்றூட் | 30/= | 20/= | 20/= | 20/= | 30/= | 20/= | 40/= | |
| முருங்கைக்காய் | 50/= | 45/= | 80/= | 60/= | 60/= | 50/= | - | |
| வெங்காயம் | 30/= | 25/= | 50/= | 30/= | 30/= | 30/= | 35/= | |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 60/= | 40/= | 60/= | 50/= | 60/= | |
| | | | | | | | | |

# தொழில்மலர்

## கணினியை இயக்குவது மட்டுமே பலனைத் தரப்போவதில்லை



கணினி தொழில்நுட்பப் புரட்சியானது உளளார் - இல்லார் என்னும் புதிய கலாசாரத்தைத் தோற்றுவிக்கிறது என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய தகவல் - நெடுஞ்சாலை தொழிலாளர் தலைவரும், இத்தாலி தேச ஒலிவெட்டிக் கம்பனி அதிபருமாகிய காலோடி பெனட்டி என்பவரே இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

தகவல் தொழில்நுட்பத்தை ஆட்சி செய்பவர்களுக்கும், கணினி வசதி இல்லாத அல்லது அதனை வாங்குவதற்குப் பணம் இல்லாதவர்களுக்குமிடையே வேற்றுமை வளர்ந்து செல்வதாகத் தொழிலாளர்கள் வர்க்கம் கூறுகிறது.

மேலும் உலகம் முழுவதும் தகவல் தொழில்நுட்பம் பணம் படைத்தவர்கள், வறியவர்களுக்கிடையே வேற்றுமையை வளர்ப்பதாகவும், தனவந்த நாடுகள் தமது பிரஜைகளை கணினித் தொழில்நுட்ப ஆளுநர்களாகப் பயிற்சியளிக்கும் அதேவேளை, ஏழை நாடுகள் தங்கள் மக்களைக் குறைந்த சம்பளம் பெறும் 'சுவிச்போட்' இயக்குநர்களாகவே பயிற்றுவிக்கின்றனர். இதன்மூலம் கணினித் தொழில் புரட்சியானது, வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் மேன்மையைத் தக்கவைக்கப் பெரும் வாய்ப்புக்களை வழங்குகிறது எனவும் பெனட்டி எச்சரிக்கிறார்.

இதற்கு ஆதாரமாகப் பின்வரும் உதாரணங்களை அவர் முன்வைக்கிறார். சமகாலத்தில் தகவல்கள் வெகு சுலபமாகவும், விரைவாகவும் கம்பி வழியே அனுப்பப்படுகின்றன. சுவிஸ் எயார் நிறுவனம் தனது தரவுகள், தகவல்கள் யாவற்றையும் இந்திய அலுவலகத்தில் சேகரித்து வைத்திருக்கிறது. ஜேர்மன் இராட்சத இலத்திரனியல் கம்பனி, சீமன் நிறுவனம் பிலிப்பைன்ஸ் அலுவலகத்தைத் தனது உள்ளூர் அலுவலகமாகவும், பிரான்ஸில் தனது சட்ட அலுவலகத்தையும் கொண்டியங்குகிறது.

இந்தப் போக்குத் தொடருமானால், அனுபவமுள்ள தொழில்நுட்ப முகாமையாளர்களே தொழில்வாய்ப்பைப் பெறவல்லவர்களாக இருப்பார்கள்.

எனவே அங்கு வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்கும். கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா முதலிய மூன்றாம் உலக நாடுகளிலிருந்து அகதிகள் ஐரோப்பாவுக்கு வந்து குவிந்தவண்ணம் இருக்கும் அதே வேளை, தொழில் வாய்ப்புக்கள், தகவல் தொழில்நுட்பம் வழியே கம்பியூடாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்.

இந்தநிலை தொடரும் பட்சத்தில், வேலையில்லாப் பிரச்சினை எந்த ரூபம் எடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள் - என்கிறார் பெனட்டி.

எனவே இதனைக் கருத்தில்கொண்டு, எமது பிரதேசத்தில் கணினித் தொழில்நுட்ப அறிவை வளர்த்தெடுப்பது எதிர்காலத்தில் நல்ல பயனைக் கொடுக்கும். வெறுமனே கணினியை இயக்குவது மட்டுமே எதிர்காலத்தில் பயனைத் தரப்போவதில்லை.

அத்துடன், கணினித் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றி விபரித்த சர்வதேச தரவுச்சபை ஆய்வாளர் டேவிட் 'எதிர்காலத்தில் கணினிகள் தகவல் சாதனமாகவே அமையும் சாத்தியம்' தென்படுவதாகக் கூறுகிறார்.

எனவே, நாம் இதனைக் கருத்தில் கொள்வது எதிர்காலத் திட்டமிடலுக்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

## பலபேர் சேர்ந்தே ஒரு நிறுவனம் என்பதை ஊழியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்



தொழில் நிறுவனமொன்றின் நிறுவன அதிகாரி அல்லது முகாமையாளர் தமக்குக்கீழே தொழில்புரியும் ஊழியர்களுக்கு என்ன வேலையைக் கையளிக்க வேண்டும் என்பதை ஏற்கனவே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

அதாவது, இவர்கள் தமக்குக்கீழே வேலைசெய்யும வேலையாட்களைக் கையாளுவது பற்றிய தெளிவான ஒரு கொள்கையை உடையவராக இருத்தல் வேண்டும்.

ஒரு அதிகாரி அல்லது முகாமையாளர் தனக்குக் கீழே உள்ளவர்களுக்கு என்ன வேலையை வழங்க வேண்டுமென்பதைத் தீர்மானித்தால், அதிகளவில் நேரத்தை மீதப்படுத்திக் கொளள முடியும்.

வேலையைத் தனக்குக்கீழே உள்ளவர்களிடம் கையளிக்கும்போது, எப்படி அந்த வேலையைச் செய்து முடிக்கவேண்டும், எப்போது செய்து முடிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களோ, அதை வேலையைக் கையளிக்கும் ஊழியரிடம் தெரிவித்துவிட வேண்டும். இவ்வாறு தெளிவாகத் தெரிவித்துக் கொள்வதன் மூலம், அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எப்போதுமே ஊழியர்கள் மேலதிகாரியைச் சந்திக்கலாம் என்னும் 'திறந்த கதவுக் கொள்கையை' நடைமுறைப்படுத்துவது - மேலதிகாரி ஒருவரின் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்துவதாக இருந்தாலும், அந்த நடவடிக்கையால் தொழில் நிறுவனம் தனது நேரத்தை வீணடிக்கின்றது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

எப்போதுமே மேலதிகாரியை ஊழியர் சந்திப்பது உகந்ததாகக் கருதமுடியாது. ஒரு முக்கிய வேலையில் அதிகாரி ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, ஊழியரொருவர் அதிகாரியைச் சந்திக்க வருகின்றார் என்றால், அப்போது சந்திப்பதற்கு நேரமில்லை என்று கூறுவதில் தவறில்லை.

அது தொழில் நிறுவனத்தின் வளர்ச்சிக்கே வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மேலதிகாரி ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஊழியர்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டுடறிந்து கொள்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

ஊழியர்களைச் சந்திக்கும் மேலதிகாரியின் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இது முக்கியமானது. ஆயினும், அதுவே கடமையாகிவிடாது என்பதையும் உணரவேண்டும்.

ஒரு நிறுவனம் பலபேர் சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது ஒவ்வொருவர் மனதிலும் உணர்ந்துகொள்ள வேண்டிய விடயமாகும். மேலதிகாரி அல்லது முகாமையாளர் ஊழியர்களிடத்தில் நடந்துகொள்கின்ற முறையே - நிறுவன வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் உகந்த ஒரு நடவடிக்கையாகும்.

- பூ.நகுலன்

## பப்படம் (அப்பளம்) தயாரித்தல்



உள்நாட்டில் விளையும் உணவுப் பொருளான உழுந்தை, மூலப்பொருளாகக் கொண்டு, பப்படம் தயாரிக்கப்படுகின்றது. இதனை வீட்டின் ஒரு பகுதியில் வைத்து ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ளலாம். எமது நாட்டு மக்கள் தமது உணவுக்குச் சுவை சேர்ப்பதற்காகப் பப்படத்தைப் பயன்படுத்துகின்றனர்.

பப்படத்தைத் தயாரித்து- உணவுச்சாலைகளுக்கும், கடைகளுக்கும் வழங்கமுடியும். மக்களின் உணவு வகைகளுள் பப்படமும் ஒன்றாகும். இதனால், எப்போதும் இதற்கான சந்தை வாய்ப்புண்டு. விழாக் காலங்களிலும், கொண்டாட்டங்களின்போதும் இதற் கான கிராக்கி அதிகரிப்பதுண்டு.

ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். தொழில்நுட்பம் வளரவளர உற்பத்தித்தொகையும் அதிகரிக்கும். பப்படத்தின் தரம் உழுந்து மாவையும், கோதுமை மாவையும் கலக்கும் வீதத்தில் தங்கியிருப்பதால், கலவையைத் தயாரிப்பதில் அதிக கவனமெடுக்க வேண்டும். பப்படம் தயாரிக்கத் தேவையான உபகரணங்கள் - மரப்பெட்டி (60 செ.மீ X 1 செ.மீ X 60 செ.மீ), மரப் பலகை (2 மீ X 2 1/2 மீ), மரத்தடி (நீளம் 25 செ.மீ, விட்டம் 2 1/2 செ.மீ) தராசு, பொலித்தீன் சீலர், அரிதட்டு.

செய்முறை தேவையான மூலப்பொருட்கள் -

உழுந்து - 1/2 கி.கி
பெருங்காயம் - 1/2 தே.கரண்டி
உப்பு - 2 தே.கரண்டி
சீரகம் - 1 தே.கரண்டி

உழுத்தம் பருப்பை இரண்டு மணிநேரம் நீரில் ஊறவைத்துப் பின்னர் நீரையும் உழுத்தம் பருப்பின் கோதையும் களைதல்வேண்டும். பின்னர் இதனை நன்கு காயவைத்து, உலர்ந்த பின் சிறிது சிறிதாக இயந்திரத்தில் இட்டு அரைத்தெடுக்க வேண்டும். பின்னர் இதனுடன் சீரகம், உப்பு, பெருங்காயம் ஆகியவற்றையும் சேர்த்து நீர்விட்டு, கெட்டியாகப் பிசைந்தெடுக்க வேண்டும். இந்த மாவை சிறிது எண்ணெய் தடவிய உரலில் இட்டு நன்றாக இடிக்கவேண்டும். இடித்த பின் மாவைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி எடுக்கவேண்டும். இந்த உருண்டைகளை அழுத்தமான சிறிது மா தூவப்பட்ட பலகையில் இட்டு, குளவியால் அப்பளமாக நசித்தெடுக்க வேண்டும். பின்னர் இவறறை வெயிலில் நன்கு உலர்த்திப் பொதிசெய்தல் வேண்டும். சுவையின் பொருட்டு சிறிது எள்ளும் சேர்த்துக் கொள்ளலாம். உற்பத்தியை அதிகரிக்க விரும்பின் தொழிலாளர் தொகையை அதிகரிக்கலாம். உழுந்து அறுவடைக்காலத்தில் மலிவான விலையில் கிடைக்குமாகையால், இந்தக் காலத்தில் கொள்வனவு செய்து பேணிக்காத்து வைத்துப் பின்னர் பப்படம் தயாரிக்கும் காலத்தில் பயன்படுத்தலாம்.

## பேசும் கையடக்கத் தொலைபேசி




தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அளப்பரியது. கண்ணோடு கண்ணடிக்கும் 'கணினிகள்', கையோடு கை கொடுக்கும் 'ரோபோக்கள்' எம்மோடு உடன் திரியும் 'கையடக்கத் தொலைபேசிகள', எங்கோ நடந்த செய்தியையும் உடனே கிராமத்துக்குக் கொண்டு வரும் 'இணையங்கள்...' என்ற தொடரில் இன்று கையடக்கத் தொலைபேசிகள் கதைக்கத் தொடங்கிவிட்ட தொழில்நுட்பப் புதுமையாகும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 'வேர்னவுட் அன்ட் ரெக்னோலஜியைப்' பயன்படுத்தி அறிமுகமாகியுள்ளதே 'பேசும் போன்' ஆகும்.

இதன் பெயர் 'நெக்மொபைல் போன' (Nak Mobil Phone) ஆகும். இந்தத் தொலைபேசியானது, எமது மின் அஞ்சல்களை (E.mail) வாசிக்கும்படி கேட்டால், அது மின் அஞ்சல்களை ஒரு பெண்ணினுடைய குரலில் வாசிக்கின்றது.

இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியதற்கான காரணம் - நாளுக்கு நாள் அதிகரிக்கும் இணையப் பாவனையை ஊக்கப்படுத்துவதும், ஆங்கில அறிவு இல்லாதவாகள் பாவித்துப் பயன்பெறவேண்டும் என்பதாகும்.

- வரணியூர் எஸ்.ஜெயா

# இலங்கை ஒரு தேசமாக என்றும் இருந்ததில்லை! சிங்கள ஆய்வாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர்

## சட்டத்துறை விரிவுரையாளர் தமிழ்மாறன்



இலங்கை முழுவதும் ஒரு தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை என்பதை, இப்போது சிங்கள ஆய்வாளர்களே ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இலங்கை ஒரு தேசமாக இருக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்களும் தவறவிடப்பட்டுவிட்டதாகத் தனது உரையில் குறிப்பிட்ட வி.ரி.தமிழ் மாறன்,

இலங்கை ஒரு தேசமாக இருக்க முடியாமல் போனமைக்கு என்ன காரணம் என்பதற்கு, நடேசனுடைய வாழ்க்கையே ஒரு உதாரணமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலத்தில் நடேசன் இலங்கைத் தேசியத்தை வலியுறுத்தி வந்த ஒருவர் என்பதை கூட்டத்தில் நினைவுகூர்ந்த தமிழ் மாறன், பின்னர் நடேசனுக்கு நேர்ந்த கதியும், அவ்வாறு நேர்வதற்கான பின்னணிக் காரணிகளுமே, இலங்கை ஏன் ஒரு தேசமாக இருக்கமுடியாமல் போனது என்பதற்கான சிறந்த உதாரணம் என்றும் அங்கு குறிப்பிட்டார்.

தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை ஆறுமணிக்கு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவர் ராஜ்குமாரின் தலைமையில் ஆரம்பமான நினைவஞ்சலிக் கூட்டத்தில், சக ஊடகவியலாளரான நிக்சன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அமீன் மற்றும் புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

நடேசனின் பாரியார், அவரது இளைய புதல்வர் மற்றும் பல ஊடகவியலாளர்கள், அன்பர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம்

புற்றளை சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது. தற்போதுள்ள கட்டடம் மிகவும் பழைய கட்டடம் என்பதாலும் சேதமடைந்து காணப்படுவதாலும் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. நடைபெற்றுமுடிந்த இந்தச் சனசமூக நிலைய நிர்வாக சபைக கூட்டத்தில் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# இரண்டாவது சிறந்த பாடசாலையாக வேம்படி மகளிர் கல்லூரி தெரிவு!

நாடளாவிய ரீதியில் 2 ஆவது சிறந்த பாடசாலையாக வேம்படி மகளிர் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் கணித, விஞ்ஞான பாடத்தை மேம்படுத்தல் தொடர்பாக 'ஜப்பான் இன்ரநஷனல் கோப்பரேஷன் ஏஜென்சி' என்ற அமைப்புடன் கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகம் ஆகியற்றுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் 25 பாடசாலைகளை கண்காணிப்புக் குழு ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அகில இலங்கை ரீதியில் இந்தச் செயல்திட்ட அமுலாக்கத்துக்கு சிறப்பாகச் செயற்பட்டமைக்காக 5 பாடசாலை அதிபர்களுக்கு சிறந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டு சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.

இந்த வைபவம் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

# வலி. வடக்கு பகுதி மக்களை தொடர்புகொள்ள கோரிக்கை

வாக்காளர் பட்டியல் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டி இருப்பதால் இடம்பெயர்ந்துள்ள வலி. வடக்கு பிரதேச மக்கள் உடனடியாகத் தத்தமது கிராம அலுவலகர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

18 வயதிற்கு மேற்பட்டவர்களும், வெளிநாடுகளில் வசிப்போரின் சார்பாக அவரின் ஒரு பிரதிநிதியும் சென்று, வாக்காளர் பட்டியலை தயாரிக்க உதவுமாறு வலிவடக்கு கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (101)

# துணைவேந்தரை அடைத்து வைத்தமைக்கு மாணவர் ஒன்றியமும் கண்டனம் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிநபர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்வந்து துணைவேந்தரின் அலுவலகத்தை பூட்டியுள்ளனர். விடுமுறை நாளாக இருந்தும் கூட தனது பணியில் ஈடுபட்ட துணைவேந்தரைப் பூட்டியமை மாணவர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் நெருக்கடிக்கு மத்தியில் பல்கலைக்கழக செயற்பாடுகள் நடைபெற்றுவரும் வேளையில், பல்கலைக்கழக விதிமுறைகளைப் புரிந்து கொள்ளாத வெளிநபர்கள், பல்கலைக்கழக செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையானது மாணவ ஒன்றியங்களினூடாகவே தீர்த்து வைக்கப்படுகின்றன. தனிப்பட்ட முறையில் அணுகித் தீர்க்கப்படுவதில்லை. இவ்வாறே பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி கி.புஸ்பமாலாவுடைய பிரச்சினையும் எமது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், திருப்தியடையாத கி.புஸ்பமாலாவுடன் சம்பந்தப்பட்ட தனிநபர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தினுள் உட்புகுந்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளமையை பல்கலைக்கழக மாணவர் சமூகமாகிய நாம் எப்போதும் அனுமதிக்கப்போவதில்லை.

யாழ். பல்கலைக்கழகம் இந்த மண்ணுக்கும், தமிழ் மக்களுக்கும் உரிய மிகப்பெரிய சக்தி வாய்ந்த சொத்து. யாழ். பல்கலைக்கழகம் மண்ணின் விடுதலைக்கும், மக்களுக்கும் ஆற்றிவரும் பணியில் இவ்வாறான நடவடிக்கைகள் பல்கலைகழகத்தின் மீது மேற்கொள்ளப்படுவதை தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கச்சைதீவுப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வர மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாக, தமிழக கடலோர காவற்படையின் புதிய தலைமை இயக்குநர் தளபதி அருண்குமார்சிங் தெரிவித்தார்.

அத்துடன், அப்பகுதியில் 24 மணிநேர தீவிர கண்காணிப்பில் கடற்படைக் கப்பல், கடலோர பொலிஸ் கப்பல், விமானம் ஒன்று ஆகியன தீவிர ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இலங்கை எல்லைப் பகுதியைத் தாண்டி, தமிழக மீனவர்கள் சென்று விடுவதால்தான் இதுபோன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறது. இதற்கு நிரந்தரத் தீர்வுகாண அந்த நாட்டு இலங்கை கடற்படையிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம்.

நம் நாட்டின் கடலோர பொலிஸ் சிறப்பு பொருளாதார மண்டலம் 2.01 மில்லியன் சதுர கிலோ மீற்றர் தூரம் உள்ளது. இதனை வருகிற 2009 ஆம் ஆண்டுக்குள் 2.9 மில்லியன் சதுர கிலோ மீற்றராக அதிகரிக்கப்படும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு கடலோரக் காவற்படையை மேலும் விரிவுபடுத்த மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். அத்துடன், புதிய விமானங்கள், கடலிலுள்ள மாசுக்களை அகற்ற புதிய கப்பல்கள் வாங்கவும், 10 இடங்களில் புதிய கடலோர பொலிஸ் மையத்தை வருகிற 2007 ஆம் ஆண்டிற்குள் அமைக்கவும் முடிவுசெயயப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# கழிவுநீர்க் குழாயினால் சுகாதார சீர்கேடு நிலவும் அபாயம்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர்க் குழாயினால் அந்தப் பகுதியில் பாரிய சுகாதாரச் சீர்கேடுகள் விளையுமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். இந்துக் கல்லூரிக்கு எதிரில் அமைந்துள்ள தேனீர்க் கடைக் கழிவுநீர் வெளியேறும் விதத்திலேயே இந்தக் குழாய் சமீபத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

குழாயைப் பொருத்துவதற்காக காங்கேசன்துறை வீதியை ஊடறுத்து பாரிய குழி தோண்டிப் புதைகப்பட்டிருப்பதாகவும், இத்தகைய துணிகர அத்துமீறல் நிகழ்ந்துள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு நிறுத்த வேண்டுமெனவும் அந்தப் பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, கழிவுநீர் யாழ். இந்துக் கல்லூரியின் பிரதான வாயிலை அண்மித்த பகுதியில் தேங்கிநிற்கும் அபாயம் உள்ளதாகவும், இதனால் மாணவர்களின் சுகாதாரத்திற்கு பாரிய கேடு விளைய இருப்பதாகவும் கூறப்படுகிறது. (206)



கடந்த மாதம் 28 ஆம் திகதி பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற, கலாவத நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகக்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் நிகழ்த்துவதைக் காணலாம். (91)

# பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை

இலங்கை சட்ட சமூக நம்பிக்கை நிதியத்தினால் பாலியல் குற்றச் செயல்கள் தொடர்பான நடைமுறை சட்சியம் மற்றும் சட்ட மருத்துவ விடயம் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்றை யாழ். மாவட்டத்தில் நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த் நிகழ்வில் பாலியல் சட்ட நடைமுறை விடயங்கள் சம்பந்தமாகவும், குற்றவியல் நீதித்துறை பிரதான காரணங்கள் தொடர்பாகவும், கருத்துரை வழங்கப்படுவதுடன் குற்றவியல், நீதிமுறையின் பிரதான செயற்பாடும் பொலிஸாரினதும் சட்டத்தரணிகளினதும் நல்லுறவை மேம்படுத்துவதற்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த சமூக சட்டமூல நம்பிக்கை நிதியத்தின் பிரதம மன்றாதிபதியாக பாலித்த பர்ணான்டோவும், வளப் பகிர்வாளர்களாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டமருத்துவ பிரிவு மருத்துவபீடம், களனி பல்கலைக்கழகம் ஆகியன உள்ளன.

## வடமராட்சி எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

வடமராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதேச ஊடகப் பேச்சாளர்கள் சங்கம நிகழ்வு, எதிர்வரும் ஞயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட எழுச்சிப் பேரவை உறுப்பினர்களும், யாழ். மாவட்ட அரசியற்துறை உறுப்பினர்களும் உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை முன்கூட்டியே சமர்பிக்குமாறு உறுப்பினர்களுககு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (13)




சமபள முரண்பாட்டை நீக்கி, புதிய சம்பளத் திட்டத்தை உடனே அமுல் செய்யக்கோரி யாழ்.பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் நேற்று மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தைக் காணலாம்.

# யாழ்.மாவட்டத்தில் மேலும் 1687 பேருக்கு பட்டதாரி நியமனம்

(கொழும்பு)

இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட மேலும் 24 ஆயிரத்து 287 பேரின் பெயர் விபரங்கள் நேற்று வெளியாகின.

இதில், யாழ்.மாவட்டத்தில் 1687, கிளிநொச்சி மாவட்டத்தில் 100, மன்னார் மாவட்டத்தில் 21, முல்லைத்தவில் 117 பேரினது பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுரீதியாக-

வேலணை - 27, யாழ்ப்பாணம் - 159, நல்லூர் - 332, தென்மராட்சி-274, பருத்தித்துறை - 105, கரவெட்டி- 150, கோப்பாய் - 172, தெல்லிப்பளை - 109, உடுவில் - 64, சண்டிலிப்பாய் - 117, சங்கானை - 102, ஊர்காவற்துறை - 11, காரைநகர் - 04, மருதங்கேணி - 32 பேரினதும் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

## மீன், முட்டை விலை வீழ்ச்சி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் மீன், முட்டை என்பவற்றின் விலைகள் வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளன.

வடமராட்சியில் பெருமளவு மீனினங்கள் பிடிபடுவதனாலும், தென் பகுதியிலிருந்து புறொயிலர் முட்டை என்பன பெருமளவு வருவதனாலும் முட்டை, புறொயிலர் இறைச்சி என்பவற்றின் விலையும் வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

முட்டை ஒன்று 5 ரூபாவாகவும், மீன் கிலோ 40 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பும் உடைத்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வண.மல்வத்தை மகாநாயக்க தேரருக்கு....

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முதற் தடவையாக சிங்கள, பௌத்த மக்களால் மும்மணிகளுள் முதல்வர் என வணங்கப் படும் கண்டி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரான ஸ்ரீ சுமங்கள தேரர் சந்திப்பொன்றை மேற்கொள்ள முயல்வதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் இன விவகாரம் கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக பரிணாமம் பெற்றது முதல், இன்றுவரை சிங்கள பௌத்த மக்களின் வணக்கத்துக்குரிய பிக்குகள் பலர் விடுதலைப் புலிகளைப் பல்வேறு கட்டங்களில் சந்தித்து பிரச்சினைகளின் சிக்கல் குறித்தும், அதனைத் தீர்ப்பதற்கான வழிகள் குறித்தும் பேசிப்போயுள்ள சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளபோதும், அவற்றின் விளைவாக எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டது கிடையாது.

இன்னும் விளக்கமாகக் கூறுவதானால், இனப்பிரச்சினையின் ஆழ மூலங்களைப் புரிந்துகொண்டு உண்மையாகவே பௌத்த தர்மத்தின்படி நியாயபூர்வமாகச் சிந்தித்து தமிழ் மக்களுக்கு சிங்கள அரசுகள் இழைத்த அநீதிகள் குறித்து வெளிப்படையாகவே கருத்துக்களை வெளியிட்ட சில மரியாதைக்குரிய பிக்குகளைத் தவிர - பெருமளவிலான பிக்குமார்களும், அவர்களின் அமைப்புக்களும் பகிரங்கமாகவே பச்சை இனவாதத்தைப் பிரசாரம் செய்பவர்களாக நடந்துகொண்டமைதான் இலங்கைப் பிரச்சினை இந்த அளவுக்கு மோசமடையக் காரணமாகும்.

நியாயமான கருத்தை தார்மீக சிந்தையுடன் அழுத்தமாக முன்வைத்த பிக்குகளை விடவும், இனவாதம் - மதவாதம் கக்கிய பிக்குகள் வலிமைகொண்ட சக்தியாக இருந்தமையால் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக நியாயபூர்வமான கருத்துக்கள் எடுபடாமல் போயின.

அரச வாழ்வை துறந்து மனித வாழ்வின் நிலையாமையைப் புரிந்துகொண்டு அரச மர நிழலைத் தேடி அமர்ந்து, வாழ்வின் அர்த்தம் தேடித் தியானித்து ஞானம் பெற்ற புத்த பகவானின் ஞான உபதேசங்களை, தம்மோபதேசங்களைக் கடைப்பிடித்து துறவறம் பூண்டு பற்றற்ற நிலையில் மக்களிடையே தர்ம சிந்தனைகளைப் பரப்பவேண்டிய பிக்குகள் இலங்கையில் அரசாங்கங்களை ஆட்டிப்படைக்கும் அரசியல் சக்திகளாக வளர்ச்சி காணத் தொடங்கியதே இன்றைய அனர்த்தங்களின் மூல காரணியாகும்.

அரசியல் தலைமைகளுக்கு ஆசீர்வாதம் வழங்கி நாட்டை தர்மநெறியில் வழிநடாத்தி சமதர்மம் தளைக்க வழிகாட்ட வேண்டிய பிக்குகளின் தலைமைப் பீடங்கள் இனவாத விஷவித்தை பரப்ப நேர்ந்தது துர்ப்பாக்கியமேயாகும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான சகல வன்செயல் சம்பவங்களிலும், அரசியல் அநியாயங்களிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும், பிக்குமார்களினதும் அவர்களின் அரசியல் சார் மதஅமைப்புக்களினதும் பங்கு கணிசமாக உண்டு என்பதில் ஐயமில்லை.

இனப்பிரச்சினை காரணமாக இலங்கை இந்த அளவுக்கு அழிவுகளையும், பொருளாதார வளர்ச்சிப் பின்னடைவுகளையும் சந்திப்பதற்கும் அதிலிருந்து மீள வழி தெரியாமல் தவிப்பதற்கும், இலங்கையின் பெரும்பான்மையின அதிவேக அரசியல் தலைமைகள் மட்டுமல்ல பௌத்த ஆன்மீக தலைமைகளும் அவர்களின் இனவாத - மதவாத சிந்தனையுடன் கூடிய அணுகுமுறைகளும்தான் காரணம் என்பதை அவர்களாலேயே நிராகரிக்க முடியாது.

1958 முதல் 1983 வரையான காலப் பகுதிக்குள் ஏற்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான சகல அரசியல் ரீதியிலான அடக்கு முறைகளுக்கும், அதன் பின்னர் மூர்க்கம் கொண்டெழுந்த இராணுவ ரீதியிலான ஒடுக்கு முறைகளுக்கும் பின்னால், சங்கைக்குரிய மகாநாயக்கர்களின் மௌன அங்கீகாரமும் இருக்கவே செய்தது.

இது வரலாற்று நிகழ்வுப் பதிவுகளின் ஆதாரங்களுடன் கூடிய உண்மையாகும். இவையாவும் நடந்து போனவைகள்.

ஆனால், இன்றும் இந்த சமாதானம் குறித்து உரக்க குரல் எழுப்பப்படும் சூழலிலும் என்ன நடக்கிறதாம்?

ஜாதிக ஹெல உறுமய, தேசிய பிக்குமார் முன்னணி, தேசப்பற்றாளர் முன்னணி, பூமி புத்திர கட்சி என சகல பேரினவாத மேலாதிக்க சிந்தனைகொண்ட அரசியல் அணிகளில் அங்கம் வகிக்கும் அனைத்து சீவர ஆடை அணிந்த பிக்குகளும், சமாதானத்திற்கு எதிராக போர்க் கோலம் கொள்வதை பௌத்த தர்மமாக நினைப்பவர்காளக அல்லவா உள்ளனர்.

இவர்களின் சமாதான எதிர்ப்புக் கோசம் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெறித்தனமாக ஒலித்து வருகிறதே....

இதனை முதலில் இந்த மகாநாயக்கர்கள் நிறுத்த வேண்டும். அவர்களைதர்ம சிந்தனையின்படி நடக்க வலியுறுத்த வேண்டும்.

இனவெறி கொண்ட அரசியல் தலைமைகளுக்கு ஆசீர்வாதம் வழங்குவதை சமாதானம் மற்றும் அமைதியின் பெயரால் நிறுத்த வேண்டும்.

இதனை அப்படியே தொடரவிட்டுவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேசுவதால் மட்டும் எதுவும் நடந்துவிடப் போவதில்லை!

என்றாலும், மல்வத்தைப் பீடாதிபதியின் முயற்சியை நாங்கள வரவேற்கின்றோம். அவரது புலிகளுடனான சந்திப்பு - ஒரு அரசியல சந்திப்பாகவோ , ஆன்மீகச் சந்திப்பாகவோ இருக்காது. நாட்டின் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வைக்காண வழி வகுக்கும் தார்மீகக் கடமைப் பொறுப்பைக் கொண்ட சந்திப்பாக இருக்கட்டும். அதனையே தமிழ் மக்களும் சமாதான சகவாழ்வை நேசிக்கும் தென்னிலங்கை மக்களும் விரும்புகின்றனர்.

எனவே இது குறித்த தெளிவான உறுதியான மனோதர்மத்துடன் கூடிய நிலைப்பாட்டுடன் மல்வத்த மகாநாயக்கரின் வரவு அமையட்டும்.

இல்லை இதுவும் ஒரு சாதாரண அரசியல் சந்திப்பாகவே அடையாளப்படுத்தப்பட்டுவிடும்.

## நாடும் நடப்பும்




# பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்

## பிரதமர் தெரிவிப்பு



எந்ததொரு பிரச்சினையையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி அரசாங்கம் தயாராகவுள்ளது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரச்சினைகளைக் கேட்டறியாது விட்டால் தீர்வுகள் கிடைக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலகுவாக தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருந்த பிரச்சினைகள் பல இன்று தீர்க்கப்பட முடியாதவையாக மாறியுள்ளது. வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களால் ஏற்பட்டுள்ள கட்டுப்படுத்த முடியாத பிரச்சினைகள் சிலவற்றை கூட்டமைப்பு அரசாங்கம் தற்போது எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது ஏற்படுகின்ற சுமையை மக்கள் மீது சுமத்த அரசாங்கம் இடமளிக்காது என இந்த வைபவத்தில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்தார்.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**

# அரசுடன் இணைவது குறித்து இன்று முக்கிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைவது குறித்து இன்று முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தில் இணைந்து அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க உதவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு இரண்டு அமைச்சுக்களும், இரண்டு பிரதி அமைச்சுக்களும் வழங்கப்படவுள்ளதாக இலங்கை அரசாங்கத் தரப்பு தெரிவித்துள்ளது. இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மூவருக்கும் பிரதி அமைச்சு பதவியை வழங்க அரசாங்கம் உறுதி அளித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அரசாங்கம் முன்வைக்கும் மக்கள் நலத்திட்டங்களுக்கு தாம் வெளியிலிருந்து ஆதரவு வழங்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவித்தார்.

# புதிய கிரகங்கள் நான்கு கண்டுபிடிப்பு

கோடை காலத்தில் வான்வெளியில் புதிய கிரகங்களைத் தேடும் பணியில் வானவியலாளர்கள், வானவியல் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஈடுபட்டு வருவது வழமை.

இந்த வகையில் சுமார் மூன்று கிரகங்கள் அமெரிக்க வானவியலாளர்கள் குழுக்களாலும், ஒரு கிரகம் இங்கிலாந்து வானவியலாளர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் எந்தக் கிரகமும் பூமியை ஒத்த தன்மையைக் கொண்டிருக்கவில்லையென்றே தற்போது அனுமானிக்கப்பட்டாலும், ஓரிரு கிரகங்கள் சூரியன், செவ்வாய் போன்றவற்றின் தன்மையுடைய கலவைகளை இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட இதர கிரகங்களில் ஒன்று - வேற்று சூரியக் குடும்பத்தை சேர்ந்த ஒன்று என்பதும், அதற்கான பால்வட்டப் பாதையில் அச்சூரியனைச் சுற்றி வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வேற்று சூரியக் குடும்பங்கள் பல இருப்பதாக ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாலும் அந்தசூரியக் குடும்பத்தைச் சேர்ந்த கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

கண்டுபிடிக்கப்பட்ட கிரகங்களில் ஒன்று சாதாரண உருப்பெருக்கியினூடாகவே பார்க்கக்கூடியது என்பதும், வேற்றுச் சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த கிரகமான 'அதிசிறந்த பூமி' என்ற கிரகம் 50 ஒளியாண்டுகளுக்குப் பின்னாலேயே உள்ளது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

# வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகட்டைப் பெறவும்

வலிவடக்கு பிரதேச சபைக்குட்பட்ட நாய் வளர்க்கும் வீட்டுச் சொந்தக்காரர் உடனடியாக தமது வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகட்டினைப் பெற்று நாய்களின் கழுத்தில் தொங்கவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்தவாரம் தொடக்கம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் தொடர் நடவடிக்கையாக எதிர்வரும் நாட்களில் ஏனைய பகுதிகளிலுள்ள கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவிருப்பதாகவும் பிரதேச சபை அதிகாரி தெரிவித்தார்.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகட்டுக்கான கட்டணம் 10 ரூபாவாகும். இதனை வாங்கி கட்டத் தவறும் நாய்களின் உரிமையாளர்கள் தமது நாய் பிடிக்கப்பட்டு விட்டதென்பதை உறுதிப்படுத்த முடியாதிருக்கும். அத்துடன் உரிமத் தகடு அற்ற நாய் மீள ஒப்படைக்கும் பட்சத்தில் அதற்கான தண்டப் பணங்களைச் செலுத்த நேரிடும் எனவும், இந்த வீண் சிரமங்களைத் தவிர்க்க பகலில் நாய்களைக் கட்டி வைத்திருக்குமாறும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (101)

# அப்துல் காதருக்கு பிணை வழங்க மறுப்பு

முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும், ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதருக்கு பிணை வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்துல் காதரின் சார்பாக ஆஜரான வழக்கறிஞரின் கோரிக்கையை கொழும்பு மாவட்ட நீதிவான் நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன நேற்று நிராகரித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாவைப் பெற்று முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாக இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி நிதியம் அரசாங்கத்தின் பொதுச் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்படும் நிறுவனம் அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் சார்பாக ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

எனினும், இந்த நிதியம் இருபது மில்லியன் ரூபா அரச மானியத்துடன் ஆரம்பிக்கப்பட்டது என்றும், எனவே அரசாங்க நிறுவனமொன்று இதனை ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் நீதிபதி விளக்கமளித்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதருக்கு ஆதரவாக பத்து சத்தியக் கடதாசிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த பத்து சத்தியக் கடதாசிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் உபயோகித்த பணத்தைக் கொண்டு முஸ்லிம் மத ஸ்தாபனங்களுக்கு அரிசி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சத்தியக் கடதாசிகளை சமர்ப்பித்த அனைவரும் விசாரணைகளின் போது தமக்கு அரிசி வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த சத்தியக் கடதாசிகளில் முன்னுக்குப்பின் முரணான தகவல்களே உள்ளதாக நீதிவான் நீதிபதி தெரிவித்தார். எனினும், இந்த விடயம் குறித்த துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிவான் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதரை இந்த மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

# அமைச்சர்களின் பிரசார யுத்த வியூகம்; யுத்தத்தை நோக்கிய அரசியல் நகர்வா?





சந்திரிகா இலண்டனுக்குச் சென்றுவிட்டார். அவர் ஓய்வு எடுக்கச சென்றாரா? அல்லது நிமித்திகர்கள் ஏதாவது சொல்லி அதனை நமபி நாட்டை விட்டு விலகி உள்ளாரா? என்பது எவருக்கும் தெரியவில்லை. ஆனால் அவர் இலண்டனுக்குச் செல்ல முன்பு கூறியவை மிக முக்கியமான வார்த்தைகளாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தை அனுப்ப வேண்டி ஏற்பட்டால் அதற்குத் தயங்க மாட்டேன் என்பது அவர் கூறிய வார்த்தைகளாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவம் நுழைய முடியுமா? புலிகள் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பார்களா? என்ற கேள்விகள் ஒரு புறம் இருக்க, சந்திரிகாவின் யுத்தச் சிந்தனை இவ்வாறு வெளிப்பட்டுள்ளது. என்பது தான் யதார்த்தமாகும். இவ்வாறு யுத்த வேட்கையை வெளிப்படுத்திய சந்திரிகா இலண்டனில் இருக்கும் பொழுது இங்கு என்ன நடக்கின்றது?

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த இரத்தினசிறி விக்கிரமநாயக்க பதில் பாதுகாப்பு அமைச்சராகின்றார். தமிழ்ப் பகுத்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவ கடற்படை முகாம்களுக்குப் பறந்து செல்கிறார் இராணுவத்தை, கடற்படையை விமானப் படையை தயார் நிலையில் இருககுமாறு உற்சாகப்படுத்துகின்றார். ஒரு நாட்டிற்குள்ளே வெவ்வேறு நீதித் துறைகளா? ஒரு நாட்டிற்குள்ளே இரு வேறு காவல துறைகளா? ஒரு நாட்டிற்குள்ளே இரு வேறு வங்கி முறைகளா? இருக்கவே முடியாது இருக்கவும் கூடாது. என்று படையினர் நடுவே உரையாற்றுகின்றார் ஏன் இந்தத் திடீர் பிதற்றல் என்றுதான் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. சந்திரிகா இலண்டனில் இருந்தாலும் அவரது குரல் இரத்தினசிறி விக்கிரமநாயக்கவின் வாயால் வெளிவருகின்றது என்பது தான் உண்மை.

தமிழ்ப் பகுதிகளின் நிர்வாகம் புலிகளால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சட்டம் ஒழுங்கு நன்றாக உள்ளது. என்று வெளிநாட்டவர் பலர் வியந்து போற்றுகின்றனர். யாழ்ப்பாண மண் இராணுவத்தால் 1995 ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட முன்னரே நிதித்துறை, நீதித்துறை, காவற்றுறை, என்பன இயங்கி வருவது உலகறிந்த உண்மை. தமிழீழ நீதிமன்றுகள், தமிழீழ வைப்பகங்கள், தமிழீழ காவல்துறைகள், என்பன இரத்தினசிறி விக்கிரம நாயக்க பிரதமராக இருநத பொழுதே இருந்ததை மறந்து விட்டு அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரே இவை எல்லாம் ஏற்பட்டதாகக்காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1990 களின் பிற்பகுதிகளிலேயே மீட்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளின் முழு நிர்வாகக கட்டமைப்பும் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்வகிக்ககப்பட்டு வந்தன. நாடாளுமன்ற அதிகாரமும், ஜனாதிபதி என்ற அதிகாரமும் தம்மிடமே இருந்த பொழுது இவை பற்றி அலட்டிக் கொள்ளாத சந்திரிகா, ஐ.தே.கட்சியுடன் புலிகள் சமாதான ஒப்பந்தம் செய்த பின்னர் இவை பற்றிக் குரல் கொடுப்பது உள்நோக்கம் கொண்டதாகும். ஐ.தே. கட்சியின் தகுமான ஒப்பந்தமே இவற்றுக்குக் காரணம் என்று சிங்கள மக்களை நம்பவைத்து அரசியல் ஆதாயம் தேடுவது ஒரு நோக்கம், புலிகள் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுகிறார்கள், அவர்களுக்குச் சமாதானத்தின் மேல் நம்பிககை இல்லை, நீதி மன்றங்களை நிறுவுகின்றார்கள், காவல்துறைப் பணிமனைகளை நிறுவுகின்றார்கள், என்று உலக நாடுகளுக்குப் பரப்புரை செய்து புலிகளின் மேல் வெளிநாடுகள் கொண்டுள்ள நலலெண்ணத்தை மாற்றுவதற்கான திட்டம் மற்றொரு நோக்கமாகும். சந்திரிகாவின் இந்த இரு நோக்கங்களையும் ஒலிக்கும் குரலாக பதில் பாதுகாப்பு அமைச்சர் தற்பொழுது செயற்பட்டு வருகின்றார்.

இவர் இவ்வாறு இராணுவத்தினர் மத்தியில் ஆயத்தங்களை மேற்கொள்ளும் அதேநேரத்தில் சந்திரிகாவின் குரல் மங்கள சமரவீரவின் வாய் மூலம் வேறு வடிவத்தில் வந்து கொண்டிருக்கிறது. முன்னர் நோர்வே தரப்பை அனுசரனையாக அழைத்த சந்திரிகா பின்னர் எரிக்சொல்ஹெய்மை ஓரம்கட்டியமை யாவரும் அறிந்ததே தற்பொழுது மங்கள சமரவீர கண்காணிப்புக் குழுவின் மீதும், நோர்வே அரசு மீதும் சந்தேகம் ஏற்படுவது போல் பேசி வருகின்றார். கண்காணிப்புக் குழு பக்கச் சார்பாக நடப்பதாகச் சந்தேகம் கொள்கிறார். போர நிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளும், நோர்வே அரசின் மத்தியஸ்தமும் ஒரு பக்கத்தைச் சார்ந்திராமல் இருக்குமானல் அது தற்போதைய நிலைமையில் மிகவிரும்பத்தக்கது என்று ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார். இதனால் அவர் இந்த இரு பகுதிகளினதும் நடவடிக்கைகளிலும் சந்தேகம் கொள்கின்றாரா? அல்லது இந்த இரு பகுதியினரையும் சிங்கள மக்கள நம்பக் கூடாது, இவர்களது நடவடிக்கைகள் எமக்கு வேண்டாம் என்று சிங்கள மக்கள் கூறவேணடும் என்று விரும்புகிறாரா? என்ற கேள்வி எழுகின்றது.

மங்கள சமரவீர இவற்றைக் கூறியிருப்பது செய்தியாளர்கள் மத்தியில் ஏனெனில் ஊடகத்துறையினர் அதிலும் குறிப்பாகச் சிங்கள தேசியப் பத்திரிகையாளர்கள் என்றுமே இந்த நாட்டில் தமிழினம் உரிமையுடன் வாழ்வதை ஏற்றுக் கொள்ளாதவை. எப்பொழுதெல்லாம் உடன்பாடுகளை ஏற்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு விரும்பாத சிங்கள மேலாதிக்கத்தை வலியுறுத்தி வந்தவைகளே இந்தப் பத்திரிகைகள் தான். எனவே பத்திரிகையாளர்களுக்கு நோர்வே தரப்பைப் பற்றியும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பற்றியும் சந்தேகத்தை ஏற்படும் விதத்தில் பேசிச் சிங்கள மக்களை யுத்தத்திற்கு ஆதரவாகத்திரட்ட முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளார் மங்கள சமரவீர இதே நேரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மணலாற்றுப் பகுதிக்குச் சென்று இராணுவக் காவலரணுக்குச் சென்று அவர்களுடன் இருந்து புலிகளின் பகுதியைப் பார்வையிட்டார். இது மற்றுமொரு உசார்ப்படுத்தலும், உற்சாகப்படுத்தலுமாகும். காவலரணுக்குள் பிரதமரே வந்து போகின்றார் என்று இராணுவம் மகிழ்வடையும் என்ற திட்டம் இது.

இவ்வாறு சிங்கள அரசு பலவிதமாகத் தன்னை யுத்தத்திற்குத தயார்படுத்துவதாகவே தெரிகின்றது.

புலிகள் தன்னாட்சி அதிகார அலகு பற்றிய கோரிக்கை வைத்தும் நாடாளுமன்றத்தைக் கலைத்து முதல் தடையை போட்டார் சந்திரிகா அடுத்துத் தேர்தல் வருகிறது. கருணா என்னும் ஒருவரை வைத்து கிழக்கைப் பிரித்துத் தமிழ்மக்களை பிளவுபடுத்தலாம், பலவீனப்படுத்தலாம், என்று கருதிச் செயற்பட்டனர். வன்னித் தலைமை என்ற ஒரு புதிய வகுப்புவாதத் தலைப்பு வெளியிடப்பட்டது. கிழக்குத் தலைமை - கருணா தலைமை என்றும் கிழககைக கட்டி ஆள வன்னித தலைமை முயல்வதாகவும் அதைத் தகரத் தெறியப் புறப்பட்டவர் கருணா என்றும் பரப்புரையை மிகவும் சாதுரியமாக் கையாண்டனர். ஆனால் அந்தோ பரிதாபம் எண்ணுமளவிற்கு கருணாவின் ஓட்டம் அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதுடன் ஆட்சியாளர் கருணாவுக்கு உதவி பல்வேறு வழிமுறைகளும் வெளிப்படுத்தப்பட்டன. கருணாவை வைதது போட்ட கணக்குச் சறுக்கி விடவே தற்பொழுது புதிய அணுகுமுறையை சந்திரிகா மேற்கொண்டுள்ளார்.

புலிகள் யுத்த நிறுத்த மீறர்களில் ஈடுபட்டுள்ளனர். புதிய புதிய முகாம்களை அமைக்கின்றனர். யுத்த ஆயத்தங்களில் கவனம் செலுத்துகின்றனர். என்ற பரப்புரை எங்கும் நடைபெறுகினறது. நோர்வே தரப்பு பக்கச்சார்பாக நடப்பதாக மக்களிடம் எடுத்துச் சொலலப்பட்டு நோர்வேதரப்பு மீது அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்த வேண்டுமென நினைக்கின்றனர். சந்திரிகாவின் ஆட்சியாளர்கள்.

போர் தொடங்கிய காலத்தில் போரின் துன்பத்தையும், பொருளியல் தாக்கங்களையும் தமிழ் மக்கள் தான் அனுபவித்தனர். ஆனால் போரின் தாக்கம் போர் விரிவடைந்ததால் சிங்கள மக்களும் அனுபவிக்கத்தொடங்கினர்.

முழு இலங்கை போரினால் பொருளியல் அழிவுகளை, தாக்கத்தை ஏற்படுத்தியதனால் சமாதானத்தை சிங்கள மக்கள் நாடினர். ரணிலும் சரி, சந்திரிகாவும் சரி சமாதானம் கொண்டு வருகிறோம் என்று சிங்கள மக்களிடம் கூறினர். ஆனால் ஆட்சியைப் பிடித்த பின்னர் சந்திரிகா தன் உண்மையான நிலைக்குத் திரும்பிவிட்டார். நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்று விட்டது.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வழி தெரியவில்லை. கூட்டுக் கட்சியான ஜே.வி.பியின் உள்ளகத் தொல்லை மறுபுறம் ஆட்சி சீராக நடைபெற வழியில்லை. எனவே மக்களின் துன்பங்களை, மக்கள் மறக்க வேண்டும். அதற்கு மக்களின் எண்ணங்களை வேறு வழிக்குத் திருப்பவேண்டும், வேறுநாடுகள் மீதுபடையெடுகக முடியுமா? முடியாது எனவே சந்திரிகா தனது அரசின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பைத் திசை திருப்ப ஒரேவழி தமிழ் மக்கள் மீது போரைத்திணிக்க வேண்டும். அப்பொழுது சிங்கள மக்களின் சிந்தனைகள் திசை மாறும் ஆட்சி தொடரும் என்று திட்டத்துடன் செயற்படுகின்றது சிங்கள ஆட்சி.

ஆனால், சமாதானத்தை விரும்பிய சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பமாட்டார்கள் என்பதுதான் அனைவரதும் நம்பிக்கை இந்த நம்பிக்கை நிறைவு பெற்றால் அனைவருக்கும் நல்லது. மாறாக சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பினால் அழிவு யாருக்கு? இதனைச் சிங்கள மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று தமிழினம் நம்புகின்றது.

## இங்கிருந்து எங்கே...?

### பிள்ளைகளும் பெரியவர்களும்

இன்றைய பெரியவர்களுக்கு குறிப்பாக பெற்றோருக்கு தலைவலி தருகிற - குறைந்த பட்சம் மன உளைச்சலைத் தருகின்ற விடயம் பிள்ளைகள் பற்றியதாயிருக்கிறது.

"சொல்லுக் கேட்கிறார்களில்லை..."

"போகிற இடம் வருகிற இடம் சொல்கிறார்களில்லை..."

"ஒரு இடமாய் இருந்து படிக்கிறார்களில்லை..."

நினைத்ததை .சாதிக்க நிற்கிறார்கள்"

கொஞ்சமென்றவுடன் கோபம் வந்து விடுகிறது"

"பழக்க வழக்கம் துண்டாகச் சரியில்லை"

"ஒரே வாய் காட்டுகிறார்கள்"

"ஒருவருக்கும் பயமில்லை"

இப்படியாய் ஏதாவது ஒரு குறையாவது அவர்களைப் பற்றிய புகாராகக் கேட்க முடிகிறது.

இவை மட்டுமல்ல. இன்னும் பல சொல்லலாம். சரிதான் - இதற்கு நாங்கள் - பெரியவர்கள் என்ன செய்யப் போகின்றோம்?

வெறுமனே குற்றம் கூறிப் புகார் சொல்லிப் புழுங்குவது பரிகாரம் தேடியதாகுமா?

எல்லா விதமான குறைகளைத் தீர்ப்பதற்கும் அடிப்படையான சில மாறுதல்கள் தேவைப்படுகின்றன.

அவற்றுள் மிக முக்கியமானது, எமது பிள்ளைகளின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமானவர்களாக நாம் மாறி விடுவதுதான்.

இதைப் படிக்கிறவர்கள் - ஏன் இப்போது நமது பிள்ளைகளின் நம்பிக்கை அன்புக்குப் பாத்திரமாய் நாம் இல்லையா என்று கேட்பீர்கள்.

நியாயம் தான் - ஓரளவுக்கு இருக்கின்றோம் தான் - ஆனால் - முற்றுமுழுதாக இல்லையென்று தான் கூற முடியும்.

காலமும் சூழலும் மாறிவிட்ட ஒரு நிலையில் அந்தக் காலத்தில் நாம் இருந்த - வாழ்ந்த விதத்தில் எமது பிள்ளைகள் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது நியாயமாகாது.

எமது பிள்ளைகளின் உலகம் எமது உலகத்தை விடப் பெரியது - நாம் பிள்ளையாக இருந்த காலத்தில் வாழ்க்கை முறை குடும்ப அமைப்பு சமூக அமைப்பு இருந்த விதம் வேறு இன்றிருக்கிற நிலை வேறு.

பொதுவாக மனிதனிடத்தில் இருக்கிற ஒரு குணம் ( சில சமயம் பலவீனம்) எதுவெனில், தன்னைப் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து நிறைய குறைகளைக் கதைக்கும் இயல்பு ஆகும்.

என்னைச் சூழ இருக்கிறவர்கள் - எப்படி இருக்கிறார்களோ நடந்து கொள்கிறார்களோ அவ்வாறே நானும் நடந்து கொள்ள வேண்டும் உடுக்க வேண்டும். வீட்டை அலங்கரிக்க வேண்டும் என்கின்ற மாதிரியான நடவடிக்கைகள் இருப்பது போல அடுத்தவர்களின் பிள்ளை போல வாழ வேண்டும்.

இவர்களைப் போல படிக்கவேண்டும் என்று சொல்கிறோம். அவ்வாறு எமது பிள்ளைகள் நடந்து கொள்ளாத பட்சத்தில் கண்டிக்கிறோம் அடுத்தவர் முன்னிலையில் அவமதிக்கின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் எமக்கும் எமது பிள்ளைகளுக்குமிடையிலான இடைவெளியை அதிகரிக்கிறது. உள்ளூர ஒரு விரிசல் - ஒரு விலகல் நிகழ்கின்றது.

தமக்கான உலகில் அவர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள முனைகிறார்கள்.

நண்பர்களின் சகவாசத்தில் கிடைக்கிற திருப்திக்கு முதலிடம் தருகிறார்கள்.

தம்மை முதன்மைப்படுத்தவோ திருப்திப்படுத்தவோ கூடிய ஒரு சூழலில் பொருந்திவிடுகிறார்கள்.

வீடு அவர்களுக்கு சிறையாகிறது. அம்மா அப்பா தமது சந்தோஷங்களுக்கு மாறான எதிரிகள் போல படுகிறார்கள்.

அவர்கள் பொருந்தியிருக்கிற சூழல் முரணான நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் அவர்களின் நடத்தையும் மாறிப் போகிறது.

சில சமயங்களில் மனமுடைந்து தனியன்களாகிப் போகிறார்கள்.

இன்னும் சிலர் சமூக விரோதச் செயற்பாடுகளில் தங்களை ஹீரோக்கள் ஆக்கிக் கொள்கிறார்கள்.

- எதிர்பார்ப்புக்கள் உடைந்த நிலையில் பெற்றோர்களாகிய நாம் கத்துகிறோம் முறையிடுகிறோம் முடிவில் அழுது அரற்றுகிறோம்.

எமது பிள்ளையின் இயல்பு, திறமை, ஈடுபாடு இவை என்னென்ன என அறியாமல் எதிலே எனது பிள்ளை வெற்றிகரமாக இயங்குவான் எனப் புரியாமல் எமது அச்சுறுத்தல்களின் வார்ப்பாக முடியாத அவனை எதிலாவது அறிந்து அவனது முழுமையைக் குலைத்து விடுகிறவர்களாய் நாம் ஆகிப்போகின்றோம்.

- இன்னும் நிதானமாக இன்னும் பொறுமையாக அன்பாக இணக்கமாக எமது பிள்ளைகளைப் புரிந்து கொண்டால் அவர்களது தனித்துவங்களோடு அவர்களை தலைநிமிர வைக்கும் செயலையாவது செய்யலாம்- மாறாக 'அவருடைய' பிள்ளை போல என்னுடைய பிள்ளையும் ஆக வேண்டும் என்கின்ற ஆசையில் சிதைந்து இழந்து விடுவோராக ஆகும் பட்சத்தில் வெறும் துயரங்களைத்தான் அறுவடை செய்து கொள்ள முடியும்.

ந.சத்தியபாலன்

(2 ஆம் பக்க தொடர்ச்சி)

## கரவெட்டி

ரி.பவித்திரா, எஸ்.தனேந்திரன், ரி.விஜிதா, ஏ.கிருஷ்ணானந்தன், எம்.நந்தினி, இ.சேந்தன், பி.தனுஜா, எஸ்.சுகந்தினி, எஸ்.நந்தினி, வி.அம்பிகை, பி.நிசாந்தினி. எஸ்.கோமதி, எஸ்.ராகவன். எம்.பாஸ்கரன், எஸ்.சி.சிறீரங்கன், ஜி.பகீரதன், ஜே.தனுஷியா, எஸ்.சிவாஜினி, எஸ்.ஜெயவாணி, பி.ஜெயவதனி, எம்.தமிழ்ச்செழியன், எம்.ரமணன், என்.கமலதாசன், என்.செந்தில்மணாளன், எஸ்.கண்ணன், கே.விமலநாயகி, ஆர்.உதயகுமார், என்.ராஜேஸ்வரி, என்.சுஜி, ரி.சுபாரஞ்சனி, பி.மதிவதனி என்.மணிவர்மன், வி.பகவதி, கே.சுவர்ணலதா, கே.மைதிலி, ஏ.கே.பாலேந்திரன், எம்.செல்வச்சந்திரன், ஏ.பவநந்தி, பி.சந்திராதேவி, கே.பாலேந்திரன், எஸ்.அற்புதராஜ், கே.ராகினி, எஸ்.செல்வரஞ்சன். ஆர்.சுதா, எம்.வாசுகி, என்.சிவமாலா, என்.சிவநாதன், பி.குணவதனி, ரி.கேசவன், கே.யசோதரன், கே.கந்தவேள், என்.காண்டீபன், எஸ்.நவனீதன், பி.பிரபாகரன், ஆர்.சண்முகதாஸ், எஸ்.பிரேமிலா, எம்.புனிதராஜா, ஆர்.கிருஷ்ணதாஸ், எஸ்.வைகுந்தவாசன், ஆர்.சாந்தநாதன், எஸ்.யுகந்தினி, எஸ்.விவேகானந்தம், எஸ்.கருணாநந்தன், பி.வாகீசன், கே.கேமலதா, கே.அகல்யா, எஸ். கீதை அமுதன், கே.கிருபாகரன், பி.நிமலதாசன், ஆர்.மாலினி, எஸ்.பிரேமிலா, எஸ்.கௌசியா, ஜி.ஜெயகாந்தன், எஸ்.தனுசா, ஆர்.ராஜன், எஸ்.பிருந்தன், எஸ்.வதனி, ரி.தாட்சாயினி, கே.இந்திராஜ், பி.சுரேஸ்குமார், எஸ்.நகுலேஸ்வரி, ரி.சசிகரன், கே.வசந்தன், கே.ஜெயசீலன், எஸ்.சிவநந்தினி, எஸ்.ராஜ்குமார், பி.யாழினி, ஆர்.விஜிதன், ஜி.ஏ.குணதயாளன், ஏ.சுதா, பி.நிருஜா, ஆர்.சற்குணதேவி, வி.வாணி, எஸ்.நிரஞ்சனா, ஆர்.அகிலன், பி.வானதி, ஏ.தயாபரன், ஆர்.பிரகலாதன், எஸ்.பாலமுருகன, ஆர்.தயாகரன், ஆர்.கேதீஸ்வரன், கே.அன்பரசி, என்.சநதிரகாசன், வி.வைதேகி, ரி.சிவகுமார், ரி.குமுதா, பி.நிமலன், ஏ.உதயகுமார், எஸ்.ஞானச்செல்வன், எஸ்.சிற்குமரன், எம்.மாதவன், கே.கேசவமூர்த்தி, கே.தயா, ஏ.ஞானப்பழம், எஸ்.அகிலன், ஏ.தவமலர், எஸ்.எஸ்.சூரியமூர்த்தி, ஜி.அகிலன், ஆர்.ரஞ்சிதன், ஆர்.சந்திரகாசன், வி.நகுலன், ரி.மகேஸ்வரன், கே.ஜெயதாஸ், கே.சிறிகந்தராசா, ஜே.ஜெயசுதன், வி.திலீபன், வி.கருணாகரன், ரி.செல்வமுரளி, வை.மதன், வை.சாந்தரூபன், எஸ்.விநோதம், வி.மணிமாறன், ஏ.ஜெயதீபன், ரி.சுகநதி, கே.மோகணதாஸ், ஐ.தயாபரன், ரி.உதயதாசன், எஸ்.மோகணதாசன, ஆர்.சாந்தினி, ரி.பிரதாப், எஸ்.பத்மினி, ரி.ரேவதி, எஸ்.ஜி.பஞ்சநாதம், எஸ்.செல்வராஜா, கே.குணேஸ்வரி, கே.விக்னராஜா, ஆர்.அமுதா, ஜே.சுப்ரமணியம், வி.குணபாஸ்கரசிங்கம், ரி.தயாதர்சினி.

## கோப்பாய்

ரி.ஜெயகாந்தன், எஸ்.ஈஸ்வரதாஸ், ரி.வரதன், கே.ஜீவஜினி, ஆர்.சுபேஸ்கரன், எஸ்.ஜெயாதர்சினி, எஸ்).விக்னவேல், ரி.தயானந்தினி, எஸ்.செல்வகஜேந்தினி, கே.பரராஜசிங்கம், வி.சிவலட்சுமி, ஆர்.சஞ்ஜீபன், ரி.சுமதி, எஸ்.மயூரன், எஸ்.திருப்பதிகாந்தன், எஸ்.கேமமாலினி, எஸ்.சுரேஸ்வரன், எம்.நவகாந்தா, பி.மதியழகன், எஸ்.ரேவதி, பி.செல்வம், பி.வாகீசன், கே.சுதர்சினி, கே.பாலகிருஸ்ணன், எம்.கொஸ்தீனா, ஆர்.சுகந்தினி, எஸ்.யமுனாராணி, எஸ்.யசிந்தன், எஸ்.கலைந்தினி, ஆர்.விக்னராஜ், எஸ்.சிறிரங்கன், என்.சுதர்சினி, எஸ்.சுஜீவகுமார், வி.நாகேஸ்வரபாலா, என.கமிலியூஸ், கே.பிரபாகரமூர்த்தி, எஸ்.பன்னீர்செல்வம், ஆர்.கேசவன், கே.துஸ்யந்தன், எம்.விமலராணி, கே.பவானந்தினி, எஸ்.சந்திரரூபன், எஸ்.சசிகலா, எஸ்.மிராதேவி, எஸ்.தயாநிதி, எஸ்.மகிந்தினி, ஆர்.அமி, ஆர்.துவாரகா, எஸ்.சர்மிளா, என்.பிரமிளா, எஸ்.கே.கிருபாகரன், எஸ்.மலர்விழி, ரி.ஜெயகாந்தன், ரி.சுதாயினி, ஏ.ஆர்.நிதர்சனா, யு.உமிளாதேவி, சி.யமுனாமலர், கே.கல்பனா, பி.ரவீந்திரன், எம்.அகிலா, எம்.துரைராஜா, இ.இலங்கேஸ்வரி, வை.அருந்ததி, ஆர்.துஸ்யந்தன், எஸ்.சிவகௌரி, எஸ்.இராசலக்ஷ்மி, ரி.தேவரதி, ரி.சுசீலாதேவி, எஸ்.பூரணி, ஜி.அனிந்திதாய், ரி.விஜயகலா, என்.சசிகலா, எஸ்.பாலகுமாரினி, பி.கௌரி, எஸ்.ஜெயந்தினி, ரி.மனோரஞ்சனி, வி.வளர்மதி, கே.வாகீஸ்வரி, ஐ.நளாயினி, பி.ஆரணி, என்.குருநாதன், ரி.சுஜாதா, பி.குகனேஸ்வரன், வி.சுதர்சனி, கே.அபர்ணா, ரி.வனஜா, கே.ரோகினி, எஸ்.திருமுருகன், ரி.ஹரிஹரன், ஜே.ரெஜிதரன், கே.பொன்னுத்துரை, ' வி.நிரஞ்சன், எம்.சிறீதரன், வி.வைதேகி, எஸ்.மஞ்சுளா, ஆர்.மதிரூபன், பி.சுகிர்தா, எஸ்.தியாகராஜா, பி.மதனரூபி, வி.கயல்விழி, கே.ரஞ்சிதமலர், எஸ்.யோகலக்ஷ்மி, கே.தவநிதி, ஆர்.தாரணி, என்.குகதாசன், எம்.மோகன்ராஜ், என.பஞ்சசீலன். கே.மணோகரன், எஸ்.யமுனா, எஸ்.கங்கா, எஸ்.கீதாஞ்சலி, எம்.கலைச்செல்வி, பி.விநோதினி, எஸ்.கே.ஐங்கரன், ஆர்.குகராஜா, ஜி.ஞானச்சந்திரன், வி.பிரேம்குமார், எஸ்.செந்தில்வேல், ரி.சிவகுமாரி, ரி.கௌரி, பி.பரமேஸ்வரன், பி.கிருஷாந்தி, எஸ்.கவிதா, எஸ்.ரவிதாஸ், பி.ராதாபாய், ஜே.யூட்ரஜிதா, எஸ்.சிறிசேதுபரன், ஆர்.கலாஜினி, என்.எஸ்.அம்பிகை, ரி.மூதினி, கே.நகுலன், எஸ்.துசிதா, எஸ்.சிவச்செல்வன், ரி.மதிமோகனா, ஆர்.பிரதீபா, எஸ்.சிந்தாமணி, எம்.கண்ணகி, ஆர்.கலைவாணி, ரி.லட்சுமணன், ஏ.புஸ்பலதா, எம்.சிவதாசன், ரி.கீரிதரன், வி.சசிகுமார், எஸ்.குகன், பி.சத்தியன், பி.சத்தியன், ஆர்.சிவதர்சிகா, ஏ.குமுதினி, ஏ.அரவிந்தன், வி.முத்துரூபன், எஸ்.பிரசாந்தன், எஸ்.தர்சினி, எஸ்.முத்தமிழ்செல்வி, ஆர்.பிரேமசாந்தி, கே.பதனேசன், கே.நிமலதாஸ், என்.கஜானி, என்.ஜெயகௌரி, என்.வனஜா, என்.சிவச்செல்வன், என்.ரமரூபன், எஸ்.ஜெயமதி, ரி.தவபாக்கியராஜா, ஏ.அமுதசொரூபன், எஸ்.சுதர்சன், ஆர்.சுஜிதா, எஸ்.முகுந்தன், எஸ்.அமுதா, ஏ.கௌசலா, ரி.ஜெயசுதன், எஸ்.இளங்கோதை.

## தெல்லிப்பளை

பி.பத்மரூபி, பி.ஜெஸ்லின் உதயராணி, வை.மயூரன், எம்.ஜெயா, ரி.ஆர்.மதீஸ்கரன், ரி.சுஜிதரன், எஸ்.தவனேஸ்வரி, ஏ.அருள்மொழி, என்.சொரூபி, பி.வசந்தி, இ.செல்டன் ரஞ்சித்ராஜ், எஸ்.ராகினி, ஆர்.ஜெகதீஸ்வரன், வி.சுதாகினி, பி.ஜெயரூபன், ஆர்.பகீரதி, வி.ஜெயசுதா, என்.கந்தையா, கே.ஆறுமுகம், எம்.சிவகலாராணி, ரி.மதியழகன், எஸ்.ரட்ணசிங்கம், கே.லலிதா, ரி.வசீகரன், ஏ.ரஜனி, எஸ்.ரஞ்சன்பாபு, எஸ்.பூதினி, எஸ்.தயாவாணி, ஏ.விஜயநாதன், எஸ்.சுகன்யா, யு.சிவயோகினி, ஏ.பிரகலாதன், எஸ்.லோகேஸ்வரன், கே.பிரதீபன், கே.சதீஸ்குமார், பி.யோகேஸ்வரன், எஸ்.நிமலன், எம்.விநோதா, எம்.சுரேஸ்குமார், கே.சசிகரன், பி.முகுந்தன், எம்.லதாங்கி, கே.ரட்ணம், ரி.தேவராஜா, எஸ்.சுபோதினி, எஸ்.சுரேந்திரன், எஸ்.ஜெயலக்குமி, பி.சிறீரஞ்சினி, ஆர்.சிறீதரன், வி.கணேசரட்ணம், எஸ்.தில்லையம்பலம், ஐ.சிவசக்திவேல், கே.யோகேஸ்வரி, பி.ஐங்கரன், ஆர்.அனுஷியா, இ.பி.ராஜநாதன், எஸ்.சுகிர்தா, ஆர்.வின்சன், எஸ்.பத்சலா, எஸ்.சுகுணா, எஸ்.அனுசியா, ஆர்.கமலக்கண்ணன், வி.பிரேமலதா, கே.ராஜினி, எஸ்.பாலமுரளி, எஸ்.கலைவாணி, எஸ்.சுதந்தினி, என்.நந்தினி, எஸ்.ரமணி, ரி.திருச்செல்வி, ஆர்.சுகாஜனன், எஸ்.சிவகௌரி, வை.சுகந்தினி, ரி.நிருசன். எம்.கலாஜினி, ஏ.அமிர்தரஜனி, எஸ்.ராஜினி, ஆர்.துஸ்யந்தி, எல்.விஜிதா, ரி.வளர்மதி, கே.ஞானச்சந்திரன், என்.சிறீரஞ்சன், ரி.செல்வக்குமார், கே.ரி.சுரேஸ்குமார், கே.கஜவிந்தன், கே.பிரதீபன், ஜே.நாகரஜனி, எஸ்.துஸ்யந்தினி, சி.ஜெயமனோன், பி.கஜேந்திரன், கே.ராகினி, எஸ்.சசிகலாதேவி, கே.கவிதரன், வை.கபிலை, என்.வாசுதேவன், ஜி.சுகர்நங்கை, எம்.கௌதமி, எஸ்.சிவானி, பி.பகீரதன், பி.சுதர்சினி, எஸ்.கமலாம்பிகை, எஸ்.சிறிகரன், எஸ்.சிவயோகினி, ஆர்.சிவரூபி, எஸ்.ஐங்கரன், ரி.கிருஸ்ணராஜா, சி.பிலிப், ரி.சுரேந்திரமோகன், எம்.சிவயாழினி.

## உடுவில்

எம்.தயாரட்ணம், என்.நிசாந்தன், ஏ.யஸரிஸ், எம்.கணேசானந்தன், எஸ்.சுபாசினி, ஆர்.பிரசன்னா, எம்.தக்ஷினி, ஏ.ஏ.டொனாட் யோகராஜன், ஆர்.ஜெனித்திரா, எஸ்.தனேஸ்வரி, ரி.சிவகுமார், எஸ்.யூஜின் கலிஸ்ரஸ், பி.தர்மபாலன், ஆர்,சிவசிதம்பரம், எஸ்.சிவகாந்தினி, என்.பன்னீர்ச்செல்வி, பி.ஜெயரட்ணம், என்.தாமரைச்செல்வி, வி.பிரசாந்தி, பி.குமரகுருபரன், ஜி.கலைவாணி, எஸ்.நிரஞ்சினி, பி.சுதர்சினி, ஆர்.ராதிகா, ஆர்.கல்பனா, ரி.அனித்தா, என்.தயாபரன், வி.கலைவாணி, என்.வானதி, சி.வி.அதிசயமலர், எஸ்.பவானி, பி.செந்தில்குமார், ஜே.யசினி, பி.சந்திரவேல், ஜி.நிறைந்தினி, பி.சுகந்தினி, எஸ்.சிவாஜினி, எஸ்.சுகிர்ததாஸ், எஸ்.சுகிர்தன், ஆர்.சசீகரன், பி.சுகுணா, கே.ரமணகுமார், ஏ.செல்வேந்திரதாஸ், ஏ.கேதீஸ்வரன், எஸ்.அருந்தவச்செல்வி, எஸ்.தவக்குமாரி, ஆர்.தர்சினி, பி.சுமதி, ஜி.நவநீதா, பி.சிவாஸ்கந்தசர்மா, எஸ்.ராஜினி, இ.கைலைநாதன், ரி.ஹரிஹரன், ஏ.அஜித்குமார், ஆர்.மோகணதாஸ், எஸ்.விநோதினி, கே.சுஜாந்தினி, என்.கோவர்த்தனன், ஏ.அபர்ணா, என்.ஜெயகாந்தன், இ.அரசகுமார், கே. கோணலந்தேயு, டபிள்யூ.ஜோன்பிலர்.

## சண்டிலிப்பாய்

எஸ்.நாகேஸ்வரி, எல்.ரமணன், எஸ்.சசிகலா, பி.சத்தியபாமா, எஸ்.உதயபாலன், கே.குமுதினி. எஸ்.பிரியாவதி, எஸ்.உருத்திரன், யு.ஹேமமாலினி, பி.ஸ்வர்ணலதா, பி.விகர்சினி, கே.யசோதா, ஆர்.கமலலோஜினிதேவி, எம்.அனுஷா, எஸ்.பிரியதர்சினி, எஸ்.நீலஜினி, எஸ்.சதீசன். கே.பொன்னையா, வி.ரமேஸ், வி.விஜிதா, கே.கலியுகன், பி.பாலசுப்பிரமணியம், எஸ்.வோஷிங்ரன், ஏ.ஜே.நைல்ஸ், எஸ்.கஜானி, வி.யமுனா, பி.ஜெயரூபன், ஜே.திலகராணி, எஸ்.சிவானந்தராஜா, பி.கணபதிப்பிள்ளை, ஜி.புவியரசு, எஸ்.சுரேஸ், எஸ்.சுஜந்தா, எஸ்.கே.ஜெயந்தினி, யு.பாலசிங்கம், ஜே.கே.மேரி அன்ரனிற்றா, ரி.சிவகுமார், ஆர்.இந்துமதி, கே.நடராஜா, என்.சுதர்சன், ஏ.யூட் சுதர்சன், ரி.திருமாறன், வி.புஸ்பலிங்கம், எஸ்.சதீஸ்குமார், வை.யோகினி, எஸ்.கலாநிதி, ஏ.விஸ்ணுகுமார், கே.மகேந்திரகுமாரி, வி.ரதி, ரி.விஜிதா, கே.ஹேமலோஜினி, எஸ்.மேரி யூலியா, ஏ.ஏ.அக்குலின் சுகந்தினி, ஏ.சிறிஜெயந்தி, ஆர்,ஷாஜகான், கே.குகானந்தி, வி.ரமணி, ரி.சத்தியலீலன். எம். தியாகராஜா, ரி.கஜிதா, எஸ்.நாகரட்ண, எஸ்.மாலதி, எஸ்.சுகந்தி, எஸ்.செல்வானந்தராஜா, எம்.எல்.ஜெனி, கே.கவிதா, எஸ்.வசீகரன். அரியம் றொபேட், ஜே.குமுதினி, கே.கேமலதா, எஸ்.வனிதா, வி.ஏ.ஏ.எல்.வசந்தகுமாரி, என்.சத்தியவேந்தன், ஜே.எஸ்.கருணைதாஸ், எஸ்.சசிவதனி, எஸ்.மேகலை, பி.நிரஞ்சனா, எஸ்.பாலச்சந்திரன், ஏ.தமிழினி, ஏ.மோகனராஜ், ஏ.தனராஜ், பி.அருளானந்தன், எஸ்.கஜன், வி.தர்ஷனி, ஆர்.முருகமூர்த்தி, இ.எம்.ஜே.மெர்லின்சாமினி, ஆர்.ஜி.விஜியரட்ணம், ஆர்.ஸ்வர்ணலதா, ஜி.அன்ரன்டயஸ், என்.வனிதா, கே.மணிவண்ணன், ஜே.திலகவதி, எஸ்.துரைரட்ணம், ஏ.ஞானேஸ்வரி, என்.சுபாங்கி, என்.சித்திராஞ்சி, பி.சிறீதரன், பி.சுதாஜின், ஆர்.ராதிகா, சி.வி.தயாநிதி, எல்.அஸ்மிதா லொயின் சுகந்தி, கே.தயாபரன், எஸ்.வீரசிங்கம், சி.நந்தினி, கே.ஜெயந்தி, ரி.சுபானுகா, எவ்.ரிச்சர்ட், எஸ்.சற்குணநந்தன், கே.உதயகுமார், கே.சரவணபவன், இ.சந்தியாப்பிள்ளை, பி.சுகந்தி, இ.இலங்கேஸ்வரன்,

## சங்கானை

எஸ்.சிவரஞ்சினி, பி.சசிகரன், கே.தர்மகுமார், ரி.சுவேந்திரன், எல்.கீதா, ஏ.வாகீசன், ஜே.மோகனா, ரி.சத்தியேந்திரா, ஜே.கனிசோபனா, ஏ.கருணாகரன், ரி.அனுஷா, ரி.திருச்செல்வி, என்.ரமணன், ரி.கிருபாகரன், ஏ.சிவனேந்திரன், பி.கணேசராஜா, வி.எஸ்.சிவநந்தன், ஜே.சோதிலிங்கம், ஆர்,ராஜரட்ணம், என்.ஆதவன், எஸ்.தவராணி, எஸ்.உதயலட்சுமி, ரி.புவன்சோதி, ஆர்.சிவகவிதா, ரி.தில்லைச்செல்வன், ரி.வதனி, இ.சந்தானபவன், எஸ்.சுலோஜினி, ஜே.சாருமதி, எஸ்.சிவந்தி, வி.விஜயா, எஸ்.பாலகுமாரி, பி.அருமைத்துரை, கே.ருசாந்தினி, எஸ்.பவானி, பி.நிலானி, ஆர்.சமலை, ரி.விஜயகாந்தரூபன், கே.வரப்பிரதன், கே.தக்சாயினி, என்.நகுலாம்பிகை, பி.விஜிதா, ஏ.தபேசன, ஏ.சுபேசன், எஸ். சுகிர்தா, எஸ்.கவிதா, ஏ.சத்தியா, ரி.தவரஞ்சி, எம்.கிளடிஸ் நிர்மலா, எஸ்.ஜெயக்குமார், எஸ்.பிரேமினி, ரி.நந்தினி, எஸ்.சசிகலா, எஸ்.சுமதி, ஆர்.அமுதினி, எஸ்.விஜயகௌரி, எஸ்.கவிதா, என்.சுரேஸ்குமார், எஸ்.பிரேமலோஜி, எஸ்.திருவளகன், பி.நந்தனசாரன், ஏ.அருளாளன், எஸ்.சிறிப்பிரியா, எஸ்.சிவகுமார், எஸ்.தயாளினி, என்.இன்பமலர், ரி.தயாளினி, எஸ்.நந்தினிதேவி, எஸ்.வேல்விழி, பி.ராஜேஸ்வரி, பி.கல்பனா, பி.மோகன், பி.தவேஸ்வரன், பி.தேவிகா, பி.மஞ்சுளா, எஸ்.அரவிந்தன், ரி.மோகனராஜ், எஸ்.சிறீதரன், எஸ்.நிசாந்தன், ரி.தேவசுதர்சினி, எம்.நந்தினி, ஆர்.நந்தகுமார், எஸ்.நாகதர்சினி, என்.சோமஸ்கந்தசர்மா, பி.சிறிபவன், கே.துசிதா, என்.கணேசமலர், பி.பத்மா, பி.சியாமளா, பி.துரைராஜ், பி.பரணீதரன், ஏ.ஜெயசுதன், பி.பொன்மதி, கே.பிரியதர்சினி, ரி.சுதர்மன், எஸ்.கேசவன், வி.கலாவதி, பி.முருகானந்தி, எஸ்,ஐங்கரன், சி.கிருஸ்னேந்திரன், ஜி.காந்திமதி, ஏ.சுகந்தினி,

## ஊர்காவற்துறை

எக்ஸ்.அனிற்றா சுபாசினி, ஜே.எம்.ஜோசப், ஏ.ஜே.டெனிஸ் எமிலியன்ஸ், என்.லலீனா, கே.சிவப்பிரியா, ஜே.ராஜகுலன்சன், ரி.பவான், கே.நேசமலர், ரி.ஜெயந்தன், ஆர்.ஜெயால்ட் அந்தோனி, எவ்.ஏ.பெலீசியா,

## காரைநகர்

வி.தயாபரன், ரி.சிவதர்சினி, ரி.கேதீஸ்வரன், வி.தயாபரன்,

## மருதங்கேணி

பி.தயானந்தன், எஸ்.அருந்ததி, பி.பத்மமலர், வி.பாலமதி, கே.சச்சிதானந்தன், ஆர்.கமலதாசன், ரி.விஜயமனோகர், எஸ்.கணேஸ்வரன், கே.சுதர்சன், ரி.மனோகரன், எஸ்.சந்திரகுமார், ரி.ஞானானந்தன், எம்.மரியராசா, எஸ்.ராஜ்குமார், எஸ்.மேரிஸ்ரெலா, கே.கலாரஞ்சினி, எஸ்.வதனா, பி.சுதாயினி, எஸ்.சிவமாலதி, எஸ்.சிதரம்பரநாதன், எஸ்.சிவகுமார், எவ்.மைக்கல் அஞ்சலோ, வி.ராஜலிங்கம், ஏ.ஜியோடஸ் இன்பராஸ், எஸ்.மேரி இமெல்டா, எஸ்.ஞானேஸ்லிவிங்ஸ்டன், என்.கண்ணகுமார், கே.ஆனந்தவதனி, எஸ்.சுதாகரன், ரி.விஜேந்திரன், ஜி.ஜெயரஜனி, ஜே.எமில்ராஜன்,

### கிளிநொச்சி மாவட்டம்

## கண்டாவளை

ஆர்.குமுதினி, ரி.அஜந்தா, எஸ்.கவிதா, எஸ்.அகிலேஸ்வரன், எஸ்.ஜீவகன், ரி.அம்பிகாவதி, ரி.கோணேஸ்வதி, எஸ்.ஈழமதி, எஸ்.லதாணந்தினி, ரி.ஜெயகவிதா, ரி.திசரூபன், ரி.ஸ்ரீபன் ரஞ்சித், ஜே.ஜெயதீஸ்வரன், ரி.பிரபாகரன், எஸ்.வளர்மதி

## கரைச்சி

என்.சுசாகரன், பி.தவகிருபா, கே.மகிந்தன், எஸ்.சந்திரபிரியா, கே.சுப்பிரமணியம், எம்.கயல்விழி, கே.சேரன், கே.ஞானராஜா, எஸ்.ரம்யாதேவி, கே.யோகநாதன், ரி.மதிவதனி, ஆர்.ரி.முரளிதரன், இ.லோகேஸ்வரன், எஸ்.மேரி வலன்ரீனா, கே.அஜந்தரூபி, ஜே.ஜெயச்சந்திரன், கே.நளாயினி, ஜே.மொறின் ஜெனந்தா, எஸ்.விமலகுமார், ஆர்.சந்திரலேகா, ஏ.யமுனா, ஜி.விஜயா, எஸ்.ஞானசீலன், பி.சுஜத்குமார், எம்.சிவநாதன், கே.கனேஜினி, கே. சந்திரவதனி, ஏசோதிமலர், ரி.தர்சினி, என்.கயல்விழி, பி.யாழினி, எஸ்.பிரியதர்சினி, பி.பரமோதயன், எஸ்.தாரனி, என்.சுரேஸ்குமார், ஜி.ராஜனகுமார், எஸ்.திருச்செல்வன், என்.சிவரஜனி, பி.கௌசலா, கே.பி.சுஜீபன், பி.மாதவன், கே.நந்தினி, என்.சுகந்தினி, எம்.விஸ்ணுதேவன், ஜி.பரணீதரன், கே.சிவகுமார், என்.ஜெயாகரன், எஸ்.ஜீவா, எம்.சசிரேகா, எஸ்.மலவரவன், எஸ்.சுகந்தன், எஸ்.பிரதீபன், சி.தனலக்ஷ்மி, பி.சுரேந்திரன், எஸ்.பிரேம்குமார், பி.பகீரதி, ஜி.கவிதா, பி.லுரேந்திரன், ஏ.கலைவாணி, ஏ.துரியோதனன், எஸ்.ஜெகதீஸ், டி.ஏ.கே.அந்தோனி, கே.நிமலதேவா, எஸ்.செந்தில்குமரன், எஸ்.விஜயதேவி, சி.மாலினி, ரி.விமலதாஸ்.

## பச்சிலைப்பள்ளி
### (பளை)

என்.பிரேமவாசன்,எஸ். போலின் மேரி, எஸ்.சுபாஜினி, எஸ்.சிவநந்தினி.

## பூநகரி

எஸ்.நகுலேஸ்வரன், ஆர்.அரவிந்தன், ரி.ஜெயந்தினி, எஸ்.லதீஸ்குமார், எஸ்.கலைஞானவதி, எம்.முத்துக்குமரன், ரி.யோகநாதன், ஜி.கலைவாணி, பி.விமலராணி, வி.கலாஜினி, ஜே.ஞானசௌந்தரி, ஆர்.தர்சினி, வி.சிவனேசன், வி.மஞ்சுளா

### முல்லைத்தீவு மாவட்டம்

## மாந்தை கிழக்கு

என்.சுந்தரராஜன், ஆர்.ரஜனி, எஸ்.கே.கருணாகரன், ரி.அன்பரசி, என்.ராகினி, எஸ்.நந்தசீலன். என்.கவிதா, வி.விக்னராஜா, எஸ்.ஜெயரஞ்சன், கே.வி.ஜெயந்தன், ஏ.சுதர்சன்.

## கரைத்துறைப்பற்று

ரி.ஜெயரஞ்சினி, எஸ்.எட்வின் நேசரட்ணம், பி.குலேந்திரன், வி.மாலினி, எம்.காஞ்சனா, ரி.ஜெகதீஸ்வரன, ரி.சிறிலதா, எஸ்.சுகந்தினி, கே.கவிதா, ஆர்.ஜீவஜினி, எஸ்.சிவபாலசுந்தரம், எம்.ஆர்.சசீந்திரசிங்கம், வி.வத்சலா, எஸ்.சுகந்தினி, வை.லிங்கேசியா, எஸ்.ரேணுகா, ரி.கலைவாணி, எஸ்.மோகண்ராஜ், கே.குணசீலன், வி.சாந்தமரியாய், வி.தர்மினி, எம்.அல்வினா, எஸ்.யசோதா, கே.ஜெரோம் ஜெயதாஸ், ஐ.அன்ரன் நேசநாயகம், எஸ்.அருள்நாதன், என்.திலீபன், எஸ்.சுகிர்தரூபன், எஸ்.அருளமதி, கே.ஞானேந்திரன், எஸ்.நிர்மலஜோதி, ஏ.ஜோச்சிம் தேவானந்த், ஆர்.சுதாஸ்கரன், பி.கலைதேவி, ஜே.கீதா, கே.தயாளினி, ஆர்.அன்ரன் யூட் டுலூஸ், எஸ்.அருள்மௌலி, வி.தயாபரன், பி.பஞ்சாச்சரசர்மா, எஸ்.பிரதீபா, என்.மோகனரூபி, பி.சுஜிர்தா, எம்.பகீரதன், ரி.சுதாகரன், ஆர்.சாமினி

## புதுக்குடியிருப்பு

எஸ்.ரஜினிகாந்தன், எஸ்.ரவி, எஸ்.அருள்ராஜகுமார், பி.இமவதி, கே.உதயதாஸ், கே.நிக்சனா, ஏ.சசிகுமார், கே.ஜெய்ந்தி, கே.சங்கர், கே.மேரி திரேசா, கே.சுஜிர்தம், எம்.மேரி சசிகலா, ஏ.கோகிலவதனி, வி.விக்னேஸ்வரி, ஜே.ராஜினி, ரி.நந்தசபேசன், வி.பாஸ்கரன், எஸ்.நிரஞ்சுலா, எஸ்.ஆர்.ரவீந்திரராசா, எஸ்.பொன்விழி, ரி.சிவசுப்பிரமணியம், ஜே.சண்முகானந்தம், வி.கிருஷ்ணவேணி, ரி.பாஸ்கரன், கே.சுபாஜினி, ஆர்,பரமேஸ்வரன், எஸ்.பேரிண்பவதனி, கே.அமிர்தலிங்கம், பி.ஜெயந்தன், பி.ஜென்ஜேஸ்வரன், பி.விஜிதா, எஸ்.சபாலிங்கம், கே.சுஜிதா, ரி.சுதர்ஜினி, என்.கல்யாணி, ஏ.கிருஷ்ணதாஸ், எஸ்.பவித்திரா, கே.விமலதாஸ், எஸ்.கலாரஜனி, வி.கமலாதேவி, எஸ்.சிவஜெயந்தன், எஸ்.சந்தானலக்ஷ்மி, எஸ்.சிவமைதிலி.

## துணுக்காய்

ரி.அமிர்தலிங்கம். ஐ.சுதாயினி, கே.தர்சினி, வி.ஜெயதீஸ்வரன், என்.ராஜி, ஆர்.ராஜசிவேந்திரன்

---

## வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு

# திருமலையில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு இன்று வியாழக்கிழமை திருகோணமலையில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி மொரவேவ பகுதியில் இருந்து திரியாய் கல்லம்பத்தை பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு ஊர் காவல்படை வீரர்களையும், ஐந்து பொதுமக்களையும், விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றனர். பின்னர் பொதுமக்கள் ஐவரும் விடுவிக்கப்படடனர். ரி.56 ரக துப்பாக்கியுடன் இருந்த இரண்டு ஊர்காவல்படையினரும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இதனைக் கண்டித்தும் அந்த ஊர் காவல்படையினரை உடனடியாக விடுவிக்கக் கோரியுமே இந்த ஹர்த்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், போக்குவரத்துக்கள், பாடசாலைகள் என்பன முற்றாக இயங்க மறுக்கவேண்டும் எனவும், அவர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மொரவேவ பகுதியில் இருந்து பொதுமக்கள் அழைத்து வரப்பட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் அவர்களால் மகஜர்களும் கையளிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள் சந்தன பியசிறி, சரத் பண்டா ஆகிய இரண்டு ஊர்காவல்படையினரையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க திருகோணமலை பொறுப்பாளர் பற்றிக்குடன் அவர்களது உறவினர்கள் சம்பூர் விடுதலைப் புலிகளது அலுவலகத்திற்குச் சென்று கடந்த வெள்ளிக்கிழமை பார்வையிட்டு வந்தனர்.

(04)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முல்லைத்தீவில் தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை திறப்பு



(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பொருளாதார வளத்தை வலுவாக்கும் நோக்குடன் - தமிழீழ வைபபகத்தின் ஊரகக்கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணிக்கு முல்லைத்தீவு நகரில் அமைக்கப்பட்ட தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளையின் பெயர்ப்பலகையை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப் பினர் ச.கனகரத்தினம் திரைநீக்கம் செய்து வைத்தார். புதிய வைப்பக கட்டடத் தொகுதியினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் துறைசார் பொறுப்பாளர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், நகர வணிகர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## கண்காணிப்பு...

ஐரோப்பிய யூனியன் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

நடைமுறையில் உள்ள போர் நிறுத்தத்தை உரிய முறையில் இரு தரப்பினரும் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பது குறித்து பக்கச்சார்பற்ற முறையில் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அவதானிக்க வேண்டும்.

கண்காணிப்புக்குழுவின் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையைப் பாதிக்கும் வகையில் அவர்கள் நடந்துகொள்ளக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழக - கேரள...

இதனடிப்படையில் இந்தியக் கடற்படையை உஷார் நிலையில் இருக்க இந்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

அகதிகள் ஊடுருவல், மருந்து மற்றும் வெடிபொருட்கள் கடத்தல் போன்றவற்றைத் தடுக்கும் நோக்குடனேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக இந்திய கடலோர காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய - இலங்கை கடல் எல்லையில் விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் இந்தியக் கடற்படையும் கடலோரக் காவல்படையும் இணைந்து இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இராமேஸ்வரம் அருகே - இந்தியக் கடல் எல்லையில் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படை என்பவற்றின் இரண்டு கப்பல்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், ஒரு விமானம், ஒரு ஹெலி மற்றும் ரோந்துப் படகுகளும் 24 மணிநேர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை - கேரள கடல் எல்லையில் 'பார்வதி' என்ற கப்பலும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநர் அருள்குமார் சிங் நேற்றுமுன்தினம் மண்டபம் பகுதிக்குச் விஜயம் செய்து எல்லைப்புற பாதுகாப்புப் பணிகள் குறித்து உயரதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தினார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை - இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக சென்னையில் நேற்றுமுன்தினம் இந்தியக் கடலோரக் காவல் படை, பாரிய ஒத்திகையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒத்திகையில் சாரஸ், விக்ரம், வராக்கா ஆகிய இராட்சத போர்க்கப்பல்களும், ராணிசித்தன், கிந்தூர் சின்னம்மா, சாந்த் பீபி, ஔவையார் ஆகிய நான்கு பிரதான கப்பல்களும் -

இரண்டு டோனியர் ரக விமானங்களும் இரு செடக் ரக ஹெலிகொப்ரர்களும் நூற்றுக்கணக்கான படகுகளும் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஏறாவூர்...

இவர் ஏறாவூர் வைத்திய சாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்த வேளை நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இறந்தவரின் உடலின் மார்புப் பகுதியிலும், கையிலும் துப்பாக்கி சூட்டுக் காயங்கள் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கண்காணிப்புக்கு....

ஹொவ்டே ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எடுத்து விளக்குவார்.

அத்துடன், படைத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு குறித்து ஆராயப்படவுள்ள இந்தச் சந்திப்பில், போர்நிறுத்த கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஸ்கணடிநேவிய கணகாணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளது.

தற்போது வடக்கு - கிழக்குப் பகுதியில் கடமையாற்றும் 55 கண்காணிப்பாளர்களுடன் மேலதிகமாக 20 பேரை சேர்த்துக்கொள்ள ஜனாதிபதியிடம் அங்ககாரம் கோரவுள்ள கண்காணிப்புக் குழுத்தலைவர் புறூவ ஹொவ்டே நாளை நோர்வேக்கு பயணமாகவுள்ளதாக தெரியவருகிறது. (01)

## சமாதான...

அண்மையில் நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களுடன் மிலிந்த மொறக்கொட நடத்திய பேச்சுக்களில் இந்திய தரப்பின் அனுசரணை குறித்து நோர்வே தரப்பால் பிரஸ்தாபிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் இருதரப்பையும் சமாதான பேச்சு மேசைக்கு அழைத்துவரும் பணியினை இந்தியாவிடம் ஒப்படைப்பது என நோர்வே தீர்மானித்துள்ளதாகவும் தமது தீர்மானங்களை இந்தமுறை மிலிந்த மொறகொட மூலம் இந்தியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் மற்றுமொரு செய்தி தெரிவிக்கிறது.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வேயின் பங்கு திருப்திகரமாக இல்லாவிடில் சமாதானப் பேச்சுவார்த்தையில் வேறு ஒருநாட்டை பங்குபற்றச் செய்லாம் என்று ஐக்கியதேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் குமாரரணவக்க கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுடன் கலந்தாலோசித்து சமாதான நடவடிக்கைகளுக்கு முன்வைக்க வேண்டும். பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணை வழங்கும் நோர்வே முக்கியமாக இருந்தாலும் நோர்வே பிரதிநிதிகளின் பங்களிப்பில் ஏதும் முரண்பாடு இருந்தால் வேறு ஒரு நாட்டை சமாதானப் பேச்சுவார்த்தையில் உள்வாங்கலாம் என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாய தொழில்நுட்ப கண்காட்சி வட்டக்கச்சியில் நேற்று ஆரம்பம்



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய தொழில்நுட்பக் கண்காட்சி கிளிநொச்சியின் வட்டக்கச்சியில் அமைந்துள்ள விவசாய மாதிரிப் பண்ணையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

இந்த நிகழ்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய இசை நடனத்துடன் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதையடுத்து தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

ஆரம்ப நிகழ்வுக்கு விவசாயத் திணைக்களம், கால்நடை சுகாதாரத்திணைக்களம், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்டோரும், அரசாங்க அமைச்சின் பணிப்பாளர்களும் இன்றயை ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் உரைநிகழ்த்தினர்.

# அத்தியாவசிய பொருட்களின் விலை அடுத்த சில வாரங்களில் குறையும்

## பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த சில வாரங்களுக்குள் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைக்கப்படும் என அமைச்சர் ஜெயராஜ் பெனாண்டோபுள்ளே தெரிவித்தார்.

தும்பு உற்பத்திக் கிராமமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை அதிகரித்துள்ளமையால் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனினும் உற்பத்தியாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நிவாரணம் வளங்க வேண்டியது கடமை என அரசாங்கம் கருதுகிறது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

திறந்த பொருளாதாரக்கொள்கை பின்பற்றப்பட்ட போதிலும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதிலும் அரசாங்கம் அக்கறை செலுத்தி வருகிறதுஎனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பயிற்சிக்கு தெரிவாகாத பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்து வெளியான இரு பட்டியல்களிலும் பெயர் வெளிவராத பட்டதாரிகள் அனைவரும் இன்று முதல் சனிக்கிழமைவரை காலை 9.30 மணி முதல் 5.30 மணிவரை பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்யுமாறு சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்படாதவர்களுக்கான நியமனத்தை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பட்டதாரிகள் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

## சமாதானம்..

எனினும் அது நிலைபெற சற்று காலம் எடுக்கும். உள்ளூர் மட்டத்தில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளே, தகர்ந்துபோயுள்ள இரு தரப்பினருக்கும் இடையேயான நம்பிக்கை யீனத்தை களையும்.

கடந்த ஜூலையில் கிழக்கில் 27 கொலை கள் இடம்பெற்றுள்ளன. ஒகஸ்ட் மாதத்தில் மேலும் 12 கொலைகள் அங்கு இடம்பெற்றுள்ளன.

இவை சமாதான முன்னெடுப்புக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும். எனவே, அனைத்துக் கொலைகளும் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார். (01)


## திருமலை...

காவல் படையினர் குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஊர்காவல்படையினர் இருவரும் ஆயுதங்களுடன் எமது பகுதிக்குள் நடமாடியபோதே விசாரணைக்காக அழைத்துச்செல்லபபட்டனர். இவர்கள் தமிழீழ நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இவர்களை அவர்களது உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் வந்து சந்தித்துச் சென்றிருக்கின்றனர்.

விசாரணை பற்றி நீதிமன்றம் எடுக்கும் நடவடிக்கைக்கு அமைவாக எமது பணி இருக்கும் என எழிலன் தெரிவித்ததுடன் எமது பகுதிக்குள் ஆயுதங்களுடன் இவர்கள் வந்தது போர்நிறுத்த மீறலாகும் எனவும் குறிப்பிட்டார். (04)



நல்லைக் கந்தன் 12 ஆம் நாள் திருவீதியுலாக் காட்சி

# நாட்டில் அமைதியை நிலைநாட்ட சுயநலப் போக்கைக் கைவிட்டு அரசியல்வாதிகள் முன்வரவேண்டும்

## மல்வத்தபீட மகாநாயக்கர் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அமைதியை நிலைநாட்ட சுயநலமற்ற முறையில் அரசியல்வாதிகள் அனைவரும் ஒரு நிலைப்பட்ட கருத்துக்கு வரவேண்டும் என கண்டி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் திம்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கலதேரர் தெரிவித்தார்.

கண்டி மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவும், யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதியும் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் இன்றைய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைக்கண்டு நாட்டில் நிலையான சமாதானத்தினை நிலைநாட்டுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் சுயலாபம் கருதாது பொதுஇணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

இல்லையேல் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். குறிப்பிட்டவர்களுக்கென்று கௌரவத்தைத் தேடிக்கொள்ளும் வகையில் செயற்படுவதைவிடுத்து அழிவுக்குள்ளாகியிருக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஒன்றுபட்டுப் பேசசுவார்த்தைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதி பிரதமர் ஆகியோரை இந்த நாட்டின் மக்கள் தெரிவுசெய்துள்ளார்கள். அவர்களை விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஜயலத் ஜயவர்த்தன வடக்கில் யுத்தம் நடைபெற்ற சமயம் சிங்களவர்கள் தமிழர்களின் இரத்தத்தைக் குடிப்பவர்கள் என்ற கருத்து நிலவியது.

ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டதையடுத்து தெற்கு மக்கள் வடக்கிற்கும் வடக்கு மக்கள் தெற்கிற்கும் சென்று வரக்கூடிய ஓர் சுமுகநிலை உருவானது.

எனவே ஒரே இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற கொள்கையை இன்று கடமையாக்கியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1644 திகதி:- 31.08.2004

வெற்றி இலக்கங்கள்

D 1 9 8 6 7 2

அடுத்த சுப்பர் பரிசு 233 லட்சத்துக்குமேல்

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.